ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ


| முழக்கம்–14 | பாஞ்சஜன்யம் ஜனவரி-2011-140 | ஒலி 1 |
| --- | --- | --- |


## Illegal, arbitrary, unreasonable action of the Joint Commissioner and the Board of Trustees of Srirangam Temple.

Customs and Traditions are part and parcel of Temple worship. Faith is the root for almost everything in life. Srivaishnavism insists on implicit faith, on God and the words of the preceptors. The administration of Srirangam Temple was in the hands of Sri Ramanuja who introduced various reforms in the Temple administration during the 12th Century. All these administrative reforms were in vogue till the year 1802.

Administration of the Srirangam Temple was taken over by the East India company in the year 1803.A.D. and Mr. Wallace the then collector of Trichy district took over the administration of the Temple. In the year 1890 there was an objection by Vadakalaiyars who gave a petition to the collector stating that the Brahmaratha Mariyathai given to the descendants of the Bhattar and Arayar are not according to tradition.

However the then Collector did not accept their contention and documented who were all eligible for this Brahmaratha mariyathai - the highest honour bestowed upon an individual by Lord Himself by ordering him to be taken to his house on the Palanquin where he is taken on procession by those people who carry Him - vide the judgements given on 10th January 1890 and 22nd November 1890.

This is a tradition continued in this Temple for more than 800 years on the Kaisikapuranam day and more than 1200 years incase of Vedaparayana Brahmaratham and Arayar Sevai. The Brahmaratha Mariyathai was given all these years i.e., upto the year 2009 without any interuption to the persons who were eligible for that mariyathai.

With the takeover of the Temples by the Government they started slowly interfering with the religious activities. People who do not have faith in God and Temple rituals are today occupying important posts and the Chief Minister of Tamilnadu himself is a sworn atheist. Under his regime more and more injustice is done to Hindu Temples and Hindus. Among the Hindus there is no unity. We never voice our concerns when injustice is done to Hindus and their customs. Principles of natural justice are not followed. The law of the land is more disobeyed than respected.

The stoppage of Brahmaratham on 18.11.2010, 26.12.2010 and 27.12.2010 respectively to Vedavyasa Bhattar, Parasara Bhattar and the Arayars was Illegal, arbitrary, and unreasonable. A letter was sent by the J.C./ E.O. to the affected parties on 20-9-2010, seeking the views on the stoppage of the Brahmaratham. Arayars and Bhattars gave their reply collectively on 7-10-2010. In the meanwhile on 27-9-2010 a resolution was passed in the Trust Board meeting "that the Brahmaratha Mariyathai is to be stopped within the precincts of the Temple effective this year" (2010).

There was a news item in the Dinakaran Tamil Daily 15-10-2010 that the Brahmaratha Mariyathai would be stopped based on a Trust Board resolution, which was refuted by the Chairman Thiyagarajan in a T.V. interview. He thus uttered a lie just to hoodwink people. He tried to create an impression as if he was a pious person interested in keeping the age old traditions of the Temple.

However the Devasthanam authorities never bothered to give a proper reply to the affected parties, who gave their representation on 17-10-2010. Even a copy of the Board resolution was not given to the affected parties i.e; but was given along with the documents in the High Court when the writ petition filed by Vedavyasa Bhattar came up for hearing on 15th November, 2010. In the meanwhile the J.C. forwarded the resolution of the Board to the Commission H.R.&.C.E. on 29-9-2010 seeking his permisson. I asked for the reply of the Commissioner through R.T.I. on 6-12-2010. I received a reply from the H.R.&.C.E.Commissioner office on 10.12.2010 stating that the Commissioner did not give any permission to the J.C. to stop the Brahmaratha Mariyathai. This goes to prove that the J.C. had acted on 18.11.2010 without any authority and had also disobeyed the orders of his superiors. The Temple rituals are conducted according to the whims and fancies of the J.C. which is highly condemnable and despicable.

The employees union of the Rangathaswamy Devasthanam passed a resolution on 23-10-2010 stating that under the social principle of Men/ Man should not carry another Man they would not carry the Brahmaratham in the coming the days. (Obviously this was schemed by the officials.) In the meanwhile one of the affected parties namely Veda Vyasa Bhattar, filed a writ in the Madurai Bench of the Madras High Court coupled with some other family issues in performing Kainkarya. The Judgement was not delievered till 17th November.

**The atheist parties joined together and they waged a wall poster war wherein they ridiculed brahmin community, and theratened that the tuft and the sacred thread of the brahmins would be cut, on 18.11.2010 and that VedaVyasa Bhattar should be arrested under the Goondas act and so on. Nobody in this Temple town was bothered about this and everyone was more interested in protecting their self image, glory, commercial interests etc.**

The Madurai Bench of the High Court gave the Judgement one day after the Brahmaratham i.e., on 19-11-2010, directing the peti tioner to go to the Commissioner & seek relief under section 63 E of the H.R.&.C.E. Act. Various judgments of Supreme Court had clearly stated that under the H.R.&.C.E. Act 0f 1959 clause 28 and 105 the Board of Trustees have no power to interfere with the long standing customs and traditions.

Before passing the resolution on 27.9.2010, proper procedure was not followed and the same was passed unilaterally without consulting anybody without any reasons mentioned for taking such a decision. The resolution was passed to fulfil the whims and fancies of the board members keeping aside the sentiments of the devotees.

Several devotees expressed their anguish and dismay at the hasty and unnecessary resolution dt. 27.9.2010 which is not supported by religious or spiritual values or sentiments, but it was a commercialized and propagandized exercise.

The resolution is illegal, unjustified, violative and ultra vires to the Fundamental Rights under Article 25 of the Constitution and under the provisions of Tamilnadu Act of 1959. None of the letters written by the Editor were replied by the Joint Commissioner Srirangam Temple on this account sofar.

The Commissioner and the Executive Officer should preserve the sanctity of the Temple at all times.

**The resolution dt 27.9.2010 cannot be termed as an emergency matter and it is an arbitrary and unjust resolution passed illegally. Further, the resolution is unconstitutional since it is in violation of the fundamental rights given under Article 25 of the Constitution, which mandates that take over of the temples shall only be for the management of the properties and secular and religious aspects cannot be touched.**

The policy decisions should be with regard to transportation, accommodation, catering, water supply, orderly darshan for worship, safety to person and property and such other matters of policy of general superintendence and review in relation to the administration of the Srirangam Devasthanam, having regard to public interest. Therefore, it cannot be out right in as much as Article 25 of the Constitution of India is very specific that take over of the temple shall be only for maintenance of the property, administration and security aspects of the temple, but the religious aspects cannot be considered.

Therefore, the resolution is arbitrary because it lacks statutory sanction, in asmuch as for the proposal there is no statutory sanction anywhere in the Rule or in the Act for passing such a resolution. Denial of Brahmaratham attracts provisions of Section 295 of the I.P.C. applies in regard to the situation like this.

Srirangam Temple is not an ordinary Temple, it is a world famous Temple, wherein age old customs and practices are in vogue. Therefore, the Board has exceeded its powers by passing such a resolution. The resolution is unconstitutional and it interferes with the freedom of religion. It is completely outside the secular activity for which the Board is empowered. The Board has no right whatsoever to interfere with the religious practice.

The Board of Trustees do not have any power or right

to make any permanent changes into the religious practices of the temple. It is arbitrary. Third part of Article 25 not only guarantees freedom as far as religion is concerned, but also to freely profess, practice and propagate religion and regulate or restrict any economic function, political or secular activity which may be associated with the religious practice. The resolution does not disclose any discussions or participations by members. Apparently, it is a hurried through decision. Such an important decision could not have been taken either in haste or without a proper peep into its pros and cons.

**Any Social change comtemplated cannot be implemented by a mere resolution of the Board of Trustees, as it is not a law making body. If the state has got power it has to bring a bill in the legislative assembly after examination by a select committee and notify in a gazette. Until then no change in the existing customs and traditions can be brought in.**

**Offering of Brahmaratham is as per the long standing custom and tradition. The significance of such a tradition cannot be understood by officials and Trustees who are political appointees. Their order to stop the Brahmara tham has to be taken as an interference in managing the religious offers which are the exclusive right of the worshippers.**

Even though Sri Parasara Thiruvenkata Bhattar and others approched the minister Sri. Jagat Rakshagan through the good offices of Sri. Velukkudi Krishnan to get a fair deal nothing materialised. With the help of Sri T.C.A. Srinivasan Advocate, a representation was made to the Commissioner on 21.12.2010, but no action was taken by him to give a stay on the resolution of the Board of Trustees on 27.9.2010.

**People who have no faith in God and Temple rituals became more active by waging a poster war. They ridiculed the brahmins, their customs and hailed the ac-**

**tion of the Joint commissioner in denying the Brahmaratham as a historic one. It is a pity that a few Srivaishnavites colluded with the Joint Commissioner and derived sadistic plassure out of these events. By denying Brahmaratham and executing an illegal resolution the Joint Commissioner has opened a Pandora's Box.**

At Thirukkurungudi the Siva idol was removed in the year 2004, and a criminal complaint was lodged with Thirukkurungudi police on 5.4.2005. After 6 years of legal battle we won the case and strictures were passed by the honourable judge Ms. Mala in her judgement dt. 29.11.2010. The denial of Brahmaratham at Srirangam is akin to the Tirukkurungudi Pakkam Nindrar case. The resolution of the Board dt 27.9.2010 is equivalent to the demolition of the Pakkam Nindrar Sannidhi in the year 2004. Like the police complaint given in the year 2005 a criminal complaint against Jayaraman the Joint Commissioner, P.K.Thiyagarajan, The Chairman Board of Trustees and other members of Trust board by name. Eventhough we will not get immediate justice on these matters i.e., quashing the resolution of 29.9.2010 and initiation of criminial proceedings against those who committed the crime we have to fight it out and wait for some years when defintely we would achieve success.

**The following is the text of the complaint given in Tamil.**

அனுப்புனர்,

அ. கிருஷ்ணமாசார்யர்,
214, கீழை உத்தர வீதி,
ஸ்ரீரங்கம், திருச்சி-6.

பெறுனர்,

ஆய்வாளர்,
திருவரங்கம் காவல் நிலையம்,
திருவரங்கம்,
திருச்சி-6.

மதிப்பிற்குரிய திருவரங்கம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு, திருவரங்கம், கீழை உத்தர வீதி, எண் 214இல் வசித்து வரும் அமரர். இரா. அனந்தாசாரியரின் மகனான அ.கிருஷ்ணமாசார்யர், வயது-72, ஓய்வு பெற்ற இந்தியன் ஆயில் நிறுவன உயர் அதிகாரி. திருவரங்கம் கோயில் வரலாற்றை 7000 பக்கங்களுக்கு விரிவாக எழுதியவரும், பாஞ்சஜன்யம் என்னும் மாதப் பத்திரிகையின் ஆசிரியருமான நான், திருவரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையரும், செயல் அலுவலருமான திரு. சி. ஜயராமன், திரு. பெ.கி. தியாகராஜன் அறங் காவலர் குழுத்தலைவர் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் வ. அமுதா, ரா, சீனுவாசன், த.சேகர். (இவர்கள் அனைவரும் திருவரங்கம் அரங்கநாதர் திருக்கோயிலில் பல்வேறு பணிகளில் ஈடு பட்டிருப்பவர்கள்) ஆகியோர்மீது I.P.C. சட்டப்பிரிவு எண்கள் 295, மற்றும் 295A ஆகியவற்றின்படி 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் நாள் உச்ச நீதி மன்றத்து நீதிபதிகள் மாண்புமிகு B.சின்ஹா, Syed Jaffar, K.N. Wanchoo ஆகியோர் அளித்த வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ள குற்றவியலின்படி சட்டவிரோதமான செயல்களைச் செய்ததற்காக உரிய மேல்நடவடிக்கை எடுக்கும்படி வேண்டி இந்தப் புகார் மனுவை அளிக்கிறேன். இவர்களில் அறங்காவலர் குழுத் தலைவரும், மற்றைய உறுப்பினர்களும், மத நம்பிக்கையையும், நீண்டகாலப் பழக்க வழக்கங்களையும் பாதிக்கும் தீர்மானத்தை 27-9-2010 அன்று இயற்றியுள்ளனர். அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இணைஆணையர் 18-11-2010 அன்று செயல்பட்டுள்ளார். (இத்துடன் 25-8-1958ஆம் நாள் உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பின் நகலையும் அளித்துள்ளேன்.)

**இந்தப் புகார் மனுவை அளிப்பதற்கான காரணங்கள்:**

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் ஒரு கார்த்திகை மாதம் வளர்பிறை 11ஆம் நாள் இரவு, அப்போது வாழ்ந்து வந்த ஒன்றான பராசரபட்டர் என்பார், வராக புராணம் என்னும் நூலின் ஒரு பகுதியான கைசிக புராணத்தினை நம்பெருமாள் திருமுன்பு அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நம்பாடுவான் என்னும் தலித் இனத்தைச் சார்ந்த ஒருவரின் அளவு கடந்த பெருமையையும், அவருக்கு இறைவனிடம் அமைந்திருந்த ஈடுபாட்டையும் அவரால் சோம சர்மா என்னும் அந்தணனின் சாபம் நீங்கப்பெற்ற வரலாற்றையும் எடுத்து உரைத்தார். இந்தப் புராணம் அனைத்து ஆத்திகப் பெருமக்களாலும்,

உயர்ந்ததும், மதிக்கப்பட்டு வருவதும், வழிபாட்டுக்குரியதுமான ஒரு நூலாக இன்றுவரை கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் புராணத்தை அன்றிரவு கேட்பவர்கள் அனைத்து செல்வத்தையும் பெறுவதோடு மட்டுமல்லாமல் இறந்தபிறகு நற்கதியை அடைவர் என்றும் அந்த நூலில் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஆத்திகர்களைப் பொறுத்தவரை முகம்மதியர்களுக்கு குரான் போலவும், கிறிஸ்தவர்களுக்கு பைபிள் போலவும், சீக்கியர்களுக்கு க்ரந்த சாஹிப் போலவும், இந்தியக் குடிமகனுக்கு அரசியல் நிர்ணயச் சட்டம் போலவும் இந்தக் கைசிக புராண சுவடி புனிதமாகக் கொள்ளப்படுகிறது.

அன்றைய தினம் இந்தக் கைசிக புராண சுவடி இறைவனின் திருவுருவத்திற்கு இணையாகக் கொள்ளப் படுகிறது. இந்தத் திருக்கோயிலில் நடைபெறும் ஒவ்வொரு விழாவிற்கும், பல நூற்றாண்டு களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளுக்கும் ஒரு தொடர்பு உண்டு. இன்றைய மக்கள் அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வ தற்காகப் பல்வேறு விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. அத்தகையதொரு நிகழ்ச்சிதான் கைசிக ஏகாதசி பிரம்மரத மரியாதையாகும். 800 ஆண்டுகளுக்கு முன் ஒன்றான பராசர பட்டருக்கும், புனிதமாகக் கருதப்பட்டு வரும் கைசிக புராண சுவடிக்கும் அளிக்கப்பட்டு வந்த பெருமையே பிரம்மரத மரியாதையாகும். மகனைத் தந்தையும், தாயும் தோளிலே சுமந்து செல்வது போலவும், விளையாட்டில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாய் இருந்த ஆட்டக்காரரைத் தோளில் சுமந்து செல்வது போலவும், இம்மைக்கும் மறுமைக்கும் வாழ்வளித்த குருவை அவர் செய்த உதவிக்கு நன்றி செலுத்திடும் வண்ணம் நான்கு நபர்கள் தம் தோள்களில் சுமந்து சென்று வந்தனர். இதுவொரு நீண்ட காலப் பழக்க வழக்கமாகும். சமுதாயச் சிந்தனை என்ற போர்வையில் நீண்ட காலப் பழக்க வழக்கத்திற்கு 18-11-2010 அன்று காலை ஊறுவிளைவித்து மேற்குறிப்பிட்ட நபர்கள் சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

சமுதாயச் சிந்தனைகளை திருக்கோயில்களில் நடைமுறைப் படுத்த வேண்டுமானால் அதற்குரிய அதிகாரம் பெற்ற சட்ட சபையில் இப்போதிருக்கும் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வந்து அதன்பிறகுதான் அமுல்படுத்த வேண்டும். அறங்காவலர் குழுவிற்கு நீண்டகாலப் பழக்க வழக்கங்களை சமுதாயச் சிந்தனையைக் காரணம்

காட்டி நிறுத்துவதற்கு எந்த அதிகாரமும் இல்லை. இவையனைத் திற்கும்மேல் அந்த மரியாதைக்குரியவர் அன்றைய தினம் ஆத்திகர்களால் ஒன்றான பராசரபட்டராகவே கொள்ளப்படுகிறார். அன்றையதினம் அவர் அணிந்துகொள்ளும் அங்கியோடும், புனித நூலான **கைசிக புராணத்தோடும்** வீதிவலம் வருவதாகக் கொள்ளப்படுமே ஒழிய மனிதனை மனிதன் தூக்குவதாக இந்தச் செயலைக் கொள்ளமுடியாது. இந்தப் பின்புலத்தை அறிந்து கொள் வதற்காக இவை இங்கே கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மதத்திலும் மதம் சார்ந்த பல்வேறு பழக்க வழக்கங்கள் நம்பிக்கையின் அடிப் படையில்தான் மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன/ பேணப்பட்டு வருகின்றன. மற்றை யோருக்கு இது நகைப்புக்குரிய செயலாகவும், சமுதாயச் சிந்தனைகளுக்கு எதிராகவும் காணப்படலாம். அத்தகையோர் ஒன்றுகூடி சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமேயொழிய அன்றாட நிர்வாகத்தை ஒழுங்காக மேற்பார்வையிடுவதற்கும், நீண்டகால பழக்க வழக்கங்களைப் பேணிப் பாது காப்பதற்கும் நியமிக்கப்பட்டுள்ள அறங்காவலர் குழு மனிதனை மனிதன் தூக்குவது கூடாது என்ற சமுதாயச் சிந்தனையை அமுல் படுத்துவதற்கு எந்த அதிகாரமும் இல்லை. கடவுள் நம்பிக்கை அற்றோர் இந்தப் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கருத்து கூறுவதற்கும் தகுதியற்றவர்கள் அல்ல.

திருக்கோயில் பழக்க வழக்கங்களை மதித்து வாழும் இறைவழிபாட்டில் நம்பிக்கை கொண்டவன் என்ற முறையிலும், (wor-shipper) ஆன்மீகப் பத்திரிகையான பாஞ்சஜன்யத்தின் ஆசிரியர் என்ற முறையிலும் 18-11-2010 அன்று காலை நடந்த பிரம்மரத மரியாதை மறுப்பு நீண்ட காலப் பழக்க வழக்கங்களுக்கு எதிரானது, I.P.C. 295, 295A ஆகியவற்றின்கீழ் மேற்குறிப்பிட்ட நபர்கள் குற்றம் புரிந்துள்ளார்கள், மேற்படியோருடைய செயல்கள் 295 சட்ட விதிக்கு உச்சநீதிமன்றம் அளித்த விளக்கத்தின் பால் குற்றமாகக் கருதப்படவேண்டும் என்று தெரிவித்து இந்தப் புகார் மனுவை நான் அளிக்கின்றேன்.

மேற்படியோர்களுடைய செயல்கள் மத நம்பிக்கைக்கு ஊறுவிளைவித்ததோடு மட்டும் அல்லாமல் புனித சுவடிக்கும், புனிதமாகக் கருதப்படும் குருவிற்கும் தீங்கிழைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும். இவர்களுடைய இந்தச் செயல் கடவுள் சிலைக்கு

ஒப்பான புராண ஓலைச் சுவடியின் தூய்மையைக் கெடுக்கும் செயலாகும் (Defilement and Desecration) என்பதால் உச்சநீதி மன்ற 25-8-1958 தீர்ப்பின்படி மத நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும். ஸ்ரீவைஷ்ண வர்களுடைய மத உணர்வுகள் இதனால் புண்படுத்தப்பட்டுள்ளன. நம்பெருமாள் என்ற கடவுள் சிலை இவர்களால் இழிவுபடுத்தப் பட்டுள்ளது. கோயில் கருவறையில் உள்ள இறைவன் சிலைக்கு ஒப்பான கைசிக புராண சுவடிக்கு அவமரியாதை ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் ஒன்றான பட்டர்களின் உருவமாக, பிரதிநிதியாக அவரது சந்ததியினர் அவமானத்திற்கும் தலை குனிவிற்கும் உள்ளாக்கப் பட்டுள்ளனர். ஆகவே I.P.C. 295இன் கீழ் இவை யனைத்தும் குற்றச் செயல்களாகும்.

மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதிகள் தமது தீர்ப்பில் ''எதிர்காலத்தில் இதுபோன்ற செயல்களில் (எந்தச் செயல்கள் என்பதை நீதிபதிகள் தம்முடைய தீர்ப்பில் விரிவாகக் குறிப் பிட்டுள்ளனர்.) ஈடுபடும் முட்டாள்தனமான செயல்களை மேற் கொள்பவர்கள்மீது (Foolish Behaviour) சட்டம் ஒழுங்கைக் காக்கக் கடமைப்பட்டுள்ள காவல்துறை நாங்கள் 295ஆம் பிரிவிற்குக் கொடுத்துள்ள விளக்கத்தின் அடிப் படையில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளனர். அதன் வழி காட்டு தலின் அடிப்படையில் இந்தப் புகார்மனு இன்று உங்களிடம் அளிக்கப் படுகிறது. இதைப் பெற்றுக் கொண்டு உரிய மேல்நடவடிக்கை எடுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த மனுவைப் பெற்றுக் கொண்டதற்கு உரிய வரவுச் சீட்டினையும் (Receipt) தந்திட வேண்டு கிறேன். இடம்: திருவரங்கம், A. Krishnamachari. dt. 8.12.2010.

**On 5.1. 2011 after the expiry of the court vacation an O.S. is to be filed and all papers are kept ready.It is hightime that Srivaishnavites fight for their rights for which they are eligible and shed their cowardice and inhibitions. We have to identify those who want to settle their personal score on matters concerning the society and expose them. Alas! They are yet to learn a lesson that if the neighbourhood is in fire, it will not take much time to engulf his/her house also. We are not able to achieve substantial progress, because of this self defeating attitude.**

***

**2)** ஸ்ரீரங்கம், 151, கீழைச் சித்திரை வீதியில் உள்ள ஸ்ரீமந் நம்மாழ்வார் ராமானுஜகூடத்தின் 75ஆம் ஆண்டு நிறைவு விழாவும், ஸ்ரீவைஷ்ணவ மாநாடும் ஸ்ரீரங்கம், மேலை உத்தர வீதியில் உள்ள ஹரிக்ருபா திருமண மண்டபத்தில் 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. காலை 7.00 மணிக்கு திருப் பள்ளியெழுச்சி திருப்பாவை கோஷ்டிக்குப் பின் பாலபோக ததீயாராதனை நடைபெற்றது. காலை 8.30 மணிக்கு உபதேச ரத்தினமாலை சேவா காலத்துக்குப் பின் 9.30. மணிக்கு மாநாடு தொடங்கியது. ஆடிட்டர் ராமச்சந்திரன், ஸ்ரீரங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கோயில் வித்வான் ஸ்ரீ.உ.வே. நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி தலைமை தாங்கி, நம்மாழ்வார் உருவப்படத்தை திறந்து வைத்து, ''ததீயாராதனையும், ராமாநுஜ கூடங்களும்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். ஸ்ரீநம்மாழ்வார் ராமானுஜகூட செயலாளர் கொடூர் ஸ்ரீநிவாஸ ராமானுஜம் திருவாய்மொழி புத்தகத்தை வெளியிட, ஸ்ரீ.உ.வே. பராசர லக்ஷ்மி நரஸிம்ஹ பட்டர் ஸ்வாமிகள் பெற்றுக் கொண்டு ''பிற மாநிலங்களில் ராமானுஜ கூடங்களின் வளர்ச்சி'' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

திண்டுக்கல் தோப்பு, இராம.விளாஞ்சோலைப்பிள்ளை ''ராமானுஜ கூடங்களின் எதிர்காலம்'' என்னும் தலைப்பில் உரையாற்றினார். ஊத்தங்கரை பிரபன்ன வித்வான் சி. சடகோப ராமாநுஜம் ''தமிழ்நாட்டு ராமானுஜ கூடங்களின் தற்போதைய நிலை'' என்னும் தலைப்பில் உரையாற்றினார். விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து கைங்யர்ஸ்ரீமான். ராஜன் அவர்கள் கருத்துரையாக வழங்கினார். நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்து கள்ளக்குறிச்சி ஆசுகவி ஆராவமுதன் அவர்கள் சிறப்பாக வழி நடத்த விழா இனிதே நிறைவு பெற்றது. ததீயாரா தனைக்குப் பின் அனைத்து பாகவதர்களுக்கும் திருவாய்மொழி புத்தகம், திருமண் ஸ்ரீசூர்ணம், ஒரு பையில் தாம்பூலம் வழங்குவது போல வழங்கப்பட்டது. சுமார் 350 பாகவதர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கைங்கர்ய ஸ்ரீமான். விளாஞ்சோலைப்பிள்ளை நிறைவு உரை வழங்கினார். ✱✱✱

**3)** வைணவன் குரல் ஸ்ரீவைஷ்ணவ மாத இதழின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா சென்னை மயிலையில் 12-12-2010 ஞாயிறன்று மாலை நடைபெற்றது. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் தலைமை தாங்கி விழா மலரை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். வலையப்பேட்டை ஸ்ரீ.உ.வே.ராமானுஜதாதாசார்ய ஸ்வாமி மற்றும் யதிராஜபாதுகா ஆசிரியர் ஸ்ரீ.உ.வே. V.V.ராமாநுஜன் ஸ்வாமி ஆகிய இருவருக்கும் வைணவச் செம்மல் விருது வழங்கப் பட்டு கௌரவிக்கப்பட்டனர். ஸ்ரீ ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவானமாமலை கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தார். ✱✱✱

## 4) மன்மதன் அம்பு படத்தில் வெளிவர இருந்த பாடலுக்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு.

இந்துமதக் கொள்கைகளையும், இந்துக்களால் வணங்கப்படும் கடவுளர்களையும் இழிவுபடுத்துவதே Secularism என்ற நிலைமையை இன்று நாட்டில் அரசியல்வாதிகள் உருவாக்கியுள்ளனர். இவர்களுக்கு இந்துக் கடவுளர்களைப் பழிப்பதே தொழிலாகும். ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட கொள்கைகள் உண்டு. இவர்கள் கடவுளை இல்லையென்று சொன்னாலும் அந்தக் கடவுள் என்றும் எங்கும் நிறைந்துள்ளார். அவர் ஆன்மாவோடு கூடியிருப்பதால் தான் ஒருவன் உளனாக இருக்கிறான். இவ்வுலகம் தோன்றி பல கோடி ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த உலகை ஒரு குடைக்கீழ் ஆண்ட மன்னர்கள் பலர். ஆனால் அவர்கள் யாவரும் அழிந்து போயினர். இவர்கள் ஆட்டமெல்லாம் ஒருசில ஆண்டுகளே. மெத்தப்படித்த அக்னிஹோத்ரம் தொடங்கி நாட்டின் முதலமைச்சர் ஈறாக தம் மனம் போனபடி பேசுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர்.

அக்னிஹோத்ரி நக்கீரன் இதழில் இந்து மதம் எங்கே போகிறது? என்ற கட்டுரைத் தொடரை எழுதி வரும்போது அருவருக்கத்தக்க முறையில் ஆபாசத்தின் எல்லையைத் தொடும் ஒரு சித்திரம் வரையப்பட்டு இதழில் வெளிவந்தது. அதேபோன்று தற்போது தன்னை நாத்திகன் என்று கூறிக்கொள்ளும் கமலஹாசன் இந்துக்களின் மனம் புண்படும்படி ஆபாசத்தின் எல்லையைத் தொடும் கவிதை ஒன்றினை எழுதி அதை மன்மதன் அம்பு என்னும் படத்தில் திணித்துள்ளார். அதில் அரங்கனை எவ்வளவு இழிவாகச் சித்தரிக்கமுடியுமோ அந்த அளவிற்கு சொற்களைக் கொண்டு கவிதையை இயற்றியுள்ளார். இதே போன்று கமலஹாசன் மேரி மாதாவைப் பற்றியோ, பாத்திமாவைப் பற்றியோ அல்லது முகம்மது நபியைப் பற்றியோ கவிதை எழுதிப் படமாக்க முற்படுவாரா? ஆனால் இந்துக்களுடைய கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் கேலி செய்வதை இவர்கள் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளார்கள். இதற்கு வலிமை சேர்ப்பதற்காக சென்ஸார் போர்டு இந்தப் பாடலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்ற பக்கபலத்தையும் தேடிக் கொண்டுள்ளார் கமலஹாசன்.

இன்று சமுதாயம் ஊழல் என்னும் கடலில் மிதந்து கொண்டிருக்கிறது. மனசாட்சியை விற்று மனைமாட்சி தேடிக் கொள்ளும் மனிதர்களே அதிக அளவில் காணப்படுகின்றனர். இதில் சென்ஸார் போர்டு மெம்பர்கள் கடைந்தெடுத்த பக்திமான்களா? அல்லது முற்றும் துறந்த முனிவர்களா? பணத்திற்கு மயங் காதவர்களா? அல்லது கொள்கைப் பிடிப்புதான் உள்ளவர்களா? சென்சார் போர்டு சரியென்றால் சத்தியமாகிவிடுமா?

மன்மதன் அம்பு படத்திற்காக நடிகர் கமலஹாசன் எழுதியுள்ள

திரைப்படப்பாடல் தமிழர் பண்பாட்டுக்கு எதிராகவும், இந்திய கலாச்சாரத்திற்கு கேடாகவும், இந்து மத நம்பிக்கைகளை புண்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. குறிப்பாக வரலட்சுமி நோன்பையும், அரங்கநாதரையும் அவமதிக்கும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது. நடிகர் கமலஹாசனின் இத்தகைய அருவருக்கத்தக்க செயலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இந்து மக்கள் கட்சியின் சார்பில் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜுன் சம்பத் எழுதியுள்ள கண்டனக் கவிதையை கீழே தந்துள்ளோம்.

கமலஹாசன் எழுதிய அதே கவிதை நடையில் இக்கண்டன கவிதை எழுதப்பட்டுள்ளது.

''காமத்தை மட்டுமே வாழ்க்கையாய் நினைக்கும் கமலஹாசனுக்கு எச்சரிக்கை!

தாய்க்கும் தாரத்திற்கும் பேதம் தெரியாத தரங் கெட்டோருக்கு எச்சரிக்கை!

கல்லானாலும் கணவன்! புல்லானாலும் புருஷன்! என்றே வாழும் கற்புடை மகளிர் சார்பில் எச்சரிக்கை!

ஒருவில்! ஒரு சொல்! ஒரு இல்! என்றே ஒருவனுக்கு ஒருத்தி பண்பாடு காக்கும் பண்டைத் தமிழர் சார்பில் எச்சரிக்கை!

உடலில் பாதியை மங்கைக்குத் தந்த உமையொரு பாகனின் அடியார்கள் சார்பில் எச்சரிக்கை!

திருமகள் வாழ மார்பினைத் தந்த பெருமாள் அடியார்கள் சார்பில் எச்சரிக்கை!

தாய்ப்பாலோடு முப்பால் பருகும் தமிழ் குலத்தின் சார்பில் எச்சரிக்கை !

காமதகனமும் இங்கேதான் ! காமசூத்திரமும் இங்கேதான் ! மனித குலத்தின் நன்மைக்கே மனைவியைத் தவிர மற்ற மங்கையரைத் தாயாய் நினைக்கும் பூமியிது, மரத்துக்குச் சேலை கட்டினால் கூட மயங்கிச் செல்லும் மடையன் நீ

கதையை நம்பிப் படமெடுக்காமல் சதையை நம்பி பிழைப்பவன் நீ

ஆணும் பெண்ணும் சேரும் வாழ்வை முன்னும் பின்னும் யோசிக்காமல் ஆண் பெண் உறவை அசிங்கப்படுத்தும் குறுக்கு புத்தி கிறுக்கன் நீ

காமதாகம் தீர்ந்த பின்பு கட்டிய பெண்ணை துரத்தியவன் நீ!

பெண்களுக்கு எதிராய் பொய்யுரை பரப்பும் உனக்குச் சொல்கிறோம் கேட்டுக் கொள்.

கமலஹாசன் : துணிச்சல் இல்லா கோழை நான், தூய்மை இல்லா மனிதன் நான், தனியே வர பயந்துதானே தரங்கெட்டவரோடு அணி சேர்ந்துள்ளேன்.

பெண் : நல்வழிக்கு நீ வரமாட்டாய்; நிச்சயம் நரகம் சென்றிடுவாய்!
கமல் : Guilty As Accused

பெண் : அப்போ ஜட்ஜ்மென்ட் சொல்றேன்
கமல் : ம் சொல்லுங்க
பெண் : உலகத் தமிழர் ஒன்று சேர்ந்து உளறல் நாயகன் உன்னை ஒரு நாள் துரத்திடுவோம். அதற்கு முன்னால் உனது மகள்கள் இருவர் முன்பு நீ எழுதிய கவிதையை சொல்லிடு அதுதான் உனக்கு சரியான தண்டனை.
கமல் : யாருக்குத் தண்டனை?
பெண் : சந்தேகமென்ன உனக்கேதான்.
கமல் : நான் பக்திமானுமில்லை! புத்திமானுமில்லை!
பெண் : உனக்கு பக்தியுமில்லை புத்தியுமில்லை !
கௌதமி பற்றிய புத்திமட்டுமே உள்ளது என்பதும் எங்களுக்குத் தெரியும்!

இந்து மக்கள் கட்சி : இந்து தெய்வங்களை மட்டுமே இழிவு படுத்தும் இவர்களுக்கு இஸ்லாம், கிறிஸ்துவ நம்பிக்கையை எதிர்த்து எழுதும் துணிச்சல் உண்டா? காமம் பற்றியே பேசித் திரியும் கயவர் பல்லை உடைத்திடவே கனமான ஒரு தடி வேண்டும் ! காம வெறியர்கள் ஒழிந்திட வேண்டும், கூடி நின்று நாம் எதிர்த்திட வேண்டும்! இளைஞர் நெஞ்சில் நஞ்சைக் கலக்கும் கவிதைக்கெதிராக கொள்கை முழக்கம் செய்திடுவோம்! வீசி எறியும் எலும்புக்காக வாலை ஆட்டும் நாயாம், வாலி வக்காலத்து வாங்கினாலும், கருணாநிதியும் உதயநிதியும் உதவி செய்து காத்து நின்றாலும், காமக்கொடூரன் கமலஹாசனுக்கு கடும் பாடம் புகட்டிட வேண்டும். உள் ஒரு வாழ்க்கை! புறம் ஒரு வாழ்க்கை ! பகல்வேடம் போடும் மேதாவிலாசம் ! நாத்திகம் பேசும் பகுத்தறிவுப் போர்வை! நாயன்மார்களும் ஆழ்வார்களும் நயம்பட உரைத்த நல்லுரைகளை திரித்துப் பேசித் திரியும் உன்னை நாங்கள் எதிர்த்து நின்றிடுவோம்.

அடுத்தவர் வீட்டு குளியல் அறையை எட்டி பார்க்கும் வழக்கம் எமக்கு எப்போதும் இருந்ததில்லை. அரங்கநாதனை அவதூறு செய்ய துணிந்த உந்தன் முகத்திரையைக் கொஞ்சம் கிழிக்க முயல்கின்றோம். கட்டிய மனைவி வாணி இருக்கையில் மாதவியோடு சுற்றித் திரிந்தாய், சரிகாவோடு சல்லாபம் செய்தாய், நடிக்க வரும் பெண்களையெல்லாம் படுக்கைக்கு அழைத்துப் பாழாக்கினாய், மகள் வயது பெண்களுடனே மானங்கெட்டு சுற்றித் திரிந்தாய், சத்தியவானின் உயிரை மீட்க சாவித்திரி கொண்டது வரலட்சுமி நோன்பு!

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் கற்புக்கரசியர் நோற்கும் வரலட்சுமி நோன்பு! அந்தரங்கம் யாவும்அறிந்து அரிதுயில் கொள்ளும் அரங்க நாதன் உன்னை யொழிக்க சுதர்சனமாய், சார்ங்கமாய் எம்மை இங்கே படைத்துள்ளான். உன்னை போன்ற அயோக்கியர்களை அழித்தொழிக்க வந்துள்ளோம். எங்கள் கூட்டம் சிங்கம் போல எழுந்து நின்று கர்ஜிக்கும், சீனிவாசனும் ராஜலட்சுமியும் சேர்ந்து பெற்ற பிள்ளையா நீ? சீனிவாசனின் தேசியமும், ராஜலட்சுமியின்

**தெய்வீகமும் உன்னைப் போல் ஓர் பிள்ளை பெற்றது எம்மைப்போன்றோர்க்கு ஆச்சரியமே! வரலட்சுமியின் மகிமை தெரிந்திட உன் தாய் ராஜலட்சுமியை வணங்கி நின்றிடு! அரங்கநாதனின் அருமை தெரிய உன் தந்தை சீனிவாசனைத் தொழுது நின்றிடு!**

**அனுமன் சேனை! ஸ்ரீ ராம் சேனை! பாரத சேனை! சிவசேனை! ஒன்றாய் சேர்ந்து உன் கருத்தை முறிப்போம்.**

*மன்மதன் அம்புவில் சர்ச்சைக்குரிய பாடல் நீக்கம்:*

**சென்னை, டிசம்பர் 20-2010: மன்மதன் அம்பு படத்தில் இடம் பெறும் குறிப்பிட்ட பாடலை நீக்குவதாக கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். உதயநிதி ஸ்டாலின் தயாரிப்பில் கே.எஸ். ரவிக்குமார் இயக்கியுள்ள படம் மன்மதன் அம்பு. கமல்ஹாசன், மாதவன், திரிஷா ஆகியோர் நடித்துள்ளனர். வரும் வியாழக்கிழமை படம் திரைக்கு வருகிறது. இந்தப் படத்துக்காக கண்ணொடு கண்ணைக் கலந்தால் என்றால் . . . என்ற பாடலை கமலஹாசன் எழுதியுள்ளார்.**

**பாடலில் கடவுள்களைப் பற்றிக் குறிப்பிடும் சர்சைக்குரிய வரிகளை நீக்குமாறு இந்து மக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அந்தப் பாடலை நீக்குவதாக கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். இது குறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை. ''நான் எழுதிய பாடல் ஹிந்துக்களின் மனதைப் புண்படுத்துவதாக பரவலாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால் தணிக்கை குழுவினர் பாடலில் புண்படுத்தக் கூடிய வரிகள் எதுவும் இல்லாததால், அதை அனுமதித்தனர். இதுவே என் நிறுவனத்தின் படமாக இருந்தால் கண்டிப்பாய் அந்த வரிகள் நிஜ ஆன்மிகவாதிகளைப் புண்படுத்தாது என்ற முழு நம்பிக்கையுடன் சென்ஸார் சான்றிதழ் சகிதம் வெளியிட்டிருப்பேன்.**

**இது உதயநிதி ஸ்டாலின் படம் என்பதாலும், எம்மதத்தவரும் படம் பார்க்க வரவேண்டும் என்ற எண்ணத்தில், பல கோடி பேர் ஏற்கெனவே பார்த்து ரசித்த பாடலாக இருந்த போதிலும் பாடல் காட்சியை நாங்களே முன் வந்து நீக்குகிறோம். என் குடும்பத்தில் அனைத்து சமயத்தினரும் இருக்கிறார்கள். நான் பகுத்தறிவாதி. இந்தப் படத்தில் நான் கலை ஊழியன் மட்டுமே''.**

**பாஞ்சஜன்யம் ஆசிரியர் குறிப்பு: இன்று ஸ்ரீவைஷ்ணவர்கள் மட்டுமல்லாமல் அனைவரும் பரசுராமனைத்தான் தொழவேண்டும். பரசு ராமனுடைய உணர்வும், ஆவேசமும் நாம் கொண்டாலொழிய இந்து மதத்தை அழிக்க முற்படுவோரிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாது. இது போன்ற செய்திகளை வெளியிடுவதுதான் இன்றைய ஆன்மீகப் பத்திரிகைகளின் அடிப்படைக் கொள்கையாக இருக்கவேண்டும். ஆனால் நம்முடைய பத்திரிகைகள் இதுபோன்ற பல அத்துமீறல்களைக் கண்டு கொள்வதில்லை.** ✱✱✱

# இந்து சமுதாயமும், சமயமும் மறைக்கப்பட்ட உண்மைகள்

*இதழ் 139இன் தொடர்ச்சி.* *ஆசிரியர். சா. காசிவேலு, சென்னை.*

இதன் காரணமாக இந்திய கலாச்சாரத்தை அழிக்க போர்ச்சுக் கீசிய கிறித்துவ அரசன் ஜான் III என்பவர் கோவா பகுதியில் தனது கவர்னருக்கு கீழ்க்கண்ட உத்தரவை அறிவித்தான்.

''கோயில்களும் சிலைகளும் உடைக்கப்பட வேண்டும். கோயில் விழாக்கள் தடுக்கப்பட வேண்டும். விக்கிரகங்களை செய்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். பிராம ணர்களுக்கும், அவர்களை ஒளித்து வைத்திருப்பவர்களுக்கும் அதிக பட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்'' என்பன.

இந்துத் திருவிழாவின் போது பாட்டுகளோ, பஜனைகளோ பாடப்படக்கூடாது. வெற்றிலை, பாக்கு விநியோகம் செய்யக்கூடாது. பந்தல்கள் அமைக்கக்கூடாது. இறந்தவர்களுக்கு திவசம் செய்யக் கூடாது, அறுவடை திருநாளை கொண்டாடக் கூடாது. ஏகாதசி விரதம் போன்றவை அனுசரிக்க கூடாது. வீட்டில் தென்னையும், துளசியும் வளர்க்கப்பட கூடாது. ஆகியவை ஜான் III என்றும், John III Pious என்றும் அழைக்கப்பட்ட போர்ச்சுக்கீசிய கிறித்துவ அரசனின் கட்டளை. (ஆதாரம் The Goa Inquisition by A.K. Priolkur-Bombay 1961, repub-lished. New Delhi Voice of India. 1991)

''இந்தியர்களும் கருப்பு, அவர்கள் வணங்கும் தெய்வங்களும் கருப்பு. அத்தகைய சிலைகளை நம் மதத்திற்கு (கிறித்துவத்திற்கு) மாறியவர்கள் போட்டு உடைக்கும் போது எனக்கு ஏற்பட்ட மன திருப்திக்கு அளவே இல்லை'' என புனிதர் பிரான்சிஸ் சேவியர் கூறியுள்ளார். இவர் போர்ச்சுக்கீசிய அரசனுக்கு 16.5.1545இல் எழுதிய கடிதத்தில், கோவாவில் இன்னும் பலர் நம் மதத்தை ஏற்றுக்கொள்ளா மல் உள்ளனர். அவர்களை தண்டிக்க "Inquisition" எனும் தண்டநீதி விசாரணையை கோவாவில் அமுல்படுத்த வேண்டும் என எழுதினார்.

(ஆதாரம் Documenta Indica - Rome 1956, Vol IV பக்கம் 229-30) தண்டநீதி விசாரணை என்பது தங்கள் மதத்தை ஏற்காத வரை உயிருடன் தீயிட்டு எரிப்பது ஆகும். இப்படிப்பட்ட மதத்தைத் தான் அவர்கள் அன்பு மதம் என்று இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**7. கால்டுவெல் பாதிரியாரின் பூர்வீகம்**

இவர் கி.பி. 1814இல் இங்கிலாந்தின் வட அயர்லாந்தில் புரொட்டஸ்டன்ட் கிறித்துவ குடும்பத்தில் பிறந்தவர். இவர் பிறந்த பகுதியில் மத, இன அரசியல் பிரச்சனை கி.பி. 1614 முதல் நிலவி வந்தது. கத்தோலிக்க கிறித்துவர்கள் வட அயர்லாந்தை ஆங்கிலேய புரொட்டஸ்டன்ட் பிடியிலிருந்து விடுவித்து தனி நாடாக அமைக்க போராடி வந்தனர். ஆங்கில மற்றும் ஸ்காட் மொழி பேசும் மக்களிடையேயும் வெறுப்புணர்வு வளர்ந்து வந்தது. வடக்கு அயர்லாந்தின் இயற்கை வளமான காடுகள் அனைத்தையும் புரொட்டஸ்டன்ட் ஆட்சியாளர்கள் அழித்துச் செல்வ செழிப்பில் வாழ்கின்றார்கள் என்பது கத்தோலிக்கர்களின் முக்கிய குற்றச்சாட்டு. இத்தகைய தனது நாட்டின் சமுதாய குற்ற பின்னணி கால்டுவெல் அவர்களுக்கு தமிழகத்திலும் இது போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்த பெரிதும் உதவியுள்ளது. இவர் 8.1.1838இல் சென்னையில் தனது காலை ஊன்றினார். பின்னர் 28.11.1841இல் நாசரேத் மற்றும் இடையன்குடி வந்துசேர்ந்து தனது வேலையை ஆரம்பித்தார். இவர் தனக்கென வகுத்துக் கொண்ட பணிகளாவன:

1. பல கோடி இந்தியரை 10-15 கிறித்துவ ஆங்கிலேயர்கள் அடக்கி ஆள்வது கர்த்தரின் ஆசீர்வாதத்தால் (divine plan) மட்டுமே சாத்தியமாகி உள்ளது. அதற்கான உதவிகளை தன்னை போன்ற பாதிரியார்கள் வழங்க வேண்டும்.

2. தமிழ்மொழியினை சமஸ்கிருதத்திலிருந்து தனிமைப் படுத்தி (அதற்கான ஒரு சில ஆதாரங்களைத் தேடி அலைந்து) தமிழர்களின் தனித்தன்மையை (?)) வெளிக் கொணருதல்.

3. பிராமணர்களை தனிமைப்படுத்துவது.

4. மறவர், நாயக்கர், சாணார் (நாடார்), தலித் மக்களை இழிவுபடுத்தி பேசுதல், எழுதுதல்.

5. நாடார்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்து தென் தமிழ் நாட்டில் குடியேறிய ''வந்தேரிகள்'' என்பது.

6. பண்டைய தமிழர் சமயம் பூத வழிபாடு முறையை சார்ந்தது. அது ஆரியர்கள் சமயம் (?) அன்று என்பது.

7. நாடார்கள் (சாணார்கள்) தலைவன் முனனிலையில் முற்பிறவியில் இராவணனின் தலைமை அமைச்சராக விளங்கினான் எனும் ஆதாரமற்ற குற்றச்சாட்டை கண்டுபிடித்து கூறியது.

8. மறவர்களின் வீர குணம் தமிழர்களின் அமைதி வாழ்க்கைக்குப் புறம்பானது என்பது (இதன் மூலம் தமிழர்களின் வீரத்தை மடக்கி மிதித்து ஆங்கிலேயே கிறித்துவர்களின் ஆட்சிக்கு ஊறு சேராத வண்ணம் தமிழர்களைப் பார்த்துக்கொள்வது.)

9. பிராமணர்கள், வேளாளர்களை சூத்திரர்கள் பட்டியலில் சேர்த்துள்ளனர் எனும் தத்துவத்தை வெளிப்படுத்தி பிராமணர்-வேளாளர், வேதாந்தம் - சித்தாந்தம் கசப்புணர்ச்சிக்கு வழிகோல்வது.

10. இலங்கையில் உள்ள தமிழர்களை தனி இனம் என அறிவித்து அங்கு உள்நாட்டு போர் பல நூறு ஆண்டுகள் நடைபெற வித்திடுவது.

11. பிராமணர்கள் எல்லா இனத்தவரையும், எல்லா வழிபாட்டு மக்களையும் தங்களுடன் சேர்த்துக் கொள்வதையே முழு வேலையாக செய்து வருகின்றனர். இத்தகைய பிராமணர்களின் ஒன்று சேர்க்கும் முயற்சியை முறியடிக்க வேண்டும். (R. Caldwell-Lectures பக்கம் 42) அதற்கு வேண்டிய பிரிவுவாத கருத்துகளை திரட்டுதல் மற்றும் வெளி யிடுதல் செய்யப்பட வேண்டும். (இதன் விளைவாக எழுந்ததே தமிழகத்தின் திராவிட இயக்கங்கள் - Castes of Mind - Nicholas B.Dirks பக்கம் 143)

**8. கால்டுவெல்-நாடார்களைப் பற்றி**

கால்டுவெல் 1849ஆம் ஆண்டில் ''திருநெல்வேலி சாணார்கள் அவர்களின் மதம்-மனநிலை மற்றும் பழக்க வழக்கங்கள்'' எனும் 77 பக்கங்கள் கொண்ட ஓர் சர்ச்சைக்குரிய புத்தகத்தை ஆங்கிலத்தில்

வெளியிட்டார். இப்புத்தகம் இன்றும் சென்னை கன்னிமாரா படிப் பகத்தில் உள்ளது. அப்புத்தகத்தில் கால்டுவெல் வரிக்கு வரி நாடார்களையும், பக்கத்திற்கு பக்கம் பிராமணர்களையும் இந்து சமயத்தையும் இழித்தும், பழித்தும் கூறியுள்ளார். நாடார்களைப் பற்றி என்ன கூறுகின்றார் என பார்க்கலாம்.

1. நாடார்களுக்கு (சாணார்களுக்கு) பனை ஏறுதலும், கருப்பட்டி தயாரித்தலும் முக்கிய தொழில். சிலர் விவசாயிக ளாகவும் உள்ளனர். (புத்தகத்தின் பக்கம் 4)

2. சாணார்கள் ஸ்ரீலங்காவிலிருந்து தமிழக தென்மாவட்டங் களில் குடியேறிய ''வந்தேரிகள்''. அவர்கள் குடியேற வந்தபோது பனங் கொட்டைகளை தமிழகம் முழுவதும் விதைத்தனர். (பக்கம் 4/பத்தி 3)

3. இராவணனுடைய பிரதம மந்திரி மகோதாரா என்பவன் சாணார் குலத்தவன். (இதற்கு எந்த ஆதாரமும் கால்டுவெல் பாதிரி யாரால் கொடுக்கப்படவில்லை). சாணார்கள் ஆடிமாதம் முதல் தேதியை விடுமுறை நாளாகவும், மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாகவும் கொண்டாடுகின்றனர். ஏனென்றால் இதே தேதியில்தான் சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். இராமனுடைய துயரத்தை சாணார்கள் சந்தோஷமான நாளாக கொண்டாடுகின்றனர். (பக்கம் 28) (இதற்கான சாட்சியங்களை கால்டு வெல்லால் கொடுக்க முடியவில்லை. வெறும் யூகத்தின் அடிப்படையில் எழுதப் பட்டுள்ளது.) ஆடி மாதம் இறுதி தேதியை நாடார்கள் மட்டுமின்றி தென் மாவட்டங்களில் உள்ள மற்ற சமுதாயத்தினரும் ஆடி இறுதி என கொண்டாடுகின்றனர். கால்டுவெல் ஆடி இறுதி என்பதற்குப் பதிலாக ஆடி முதல் தேதி என தவறாக குறிப்பிட்டுள்ளார். இன்று கூட திருநெல்வேலி நாடார்கள் மத்தியில் கேரளாவில் போன்று ஜாதகங்களை கொல்லம் ஆணடு கொண்டு வகுப்பதும் நில பத்திரங்களையும், திருமணப் பத்திரிக்கைகளையும் கொல்லம் ஆண்டினை குறிப்பிட்டு எழுதப் படுவதையும் காணலாம்.

4. சாணார்கள் கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள் அல்ல. பொய் சொல்லு வதற்கு தயங்காதவர்கள். ஏமாற்று வேலையையும், தாழ்வான குணங் களையும் உடையவர்கள். (பக்கம் 33) இவர்கள் அறிவுப் பூர்வமானவர்கள் அல்லர். மிகவும் கோழையர்கள் கூட. இவர்கள் நன்றி மறப்பவர்கள், சுயநலவாதிகள், சதிகாரர்கள், ஏமாற்றுகாரர்கள், வணிக பொருள்களை

திருடுபவர்கள். (பக்கம் 38, 39) படிப்பறிவு இல்லாத வர்கள். (பக்கம் 52) நிலப்பிரச்சி னைகளிலே காலத்தை கழிப்பவர்கள். (பக்கம் 54)

5. சாணார்கள் சோம்பேறிகள், மந்த புத்தி உடையவர்கள், அவர்களின் குழந்தைகள் அல்லது உறவினர்கள் காலரா நோயால் சாகும் தருவாயில் இருந்தால் கூட விழித்திருந்து அவர்களுக்கு ஊழியம் செய்யாமல் தூங்கும் தன்மை உடையவர்கள். (பக்கம் 57)

6. சாணார்கள் சுய சிந்தனை அற்றவர்கள். சுயமாக சிந்திக் காமல் தங்களுடைய முன்னோர்கள் செய்த/கூறிய செயல்களுக்கே மதிப்பு கொடுப்பவர்கள். தங்களின் வாழ்நாளில் பாதியை சோம்பேறித்தனமாகவே கழிப்பவர்கள், எந்த தொழிலை செய்தாலும் இவர்களுக்கு அதனை பூரணமாக செய்யும் திறமை கிடையாது. கடனில் மூழ்கி இருப்பவர்கள், ஏழைகள் (பக்கம் 58)

மொத்தத்தில் மேற்கிந்திய தீவிலுள்ள கீக்ரோக்களைவிட சாணார்கள் அறிவாற்றலிலும், செயல்திறனிலும் தாழ்ந்தவர்கள் என்றும் எழுதியுள்ளார்.

### 9. கால்டுவெல்லுக்கு மறுப்பு

இக்காலக்கட்டத்தில் இந்துக்களின் ஒரு பிரிவினர் கால்டுவெல் பாதிரியாரின் பொய் பிரச்சாரத்தை உண்மை என நம்பி நாடார்களை (சாணார்களை) இழிந்த சாதியினர் எனவும், அவர்களை திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குள் அனுமதிக்கக்கூடாது எனவும் தடுத்தனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்றும் நாடார்களுக்கு எதிராக ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் தொடரப் பட்டது. OS நம்பர் 88 of 1872). அவ்வமயம் ஈரோடு மாவட்டம் பாசூர் எனும் ஊரில் உள்ள மடாதிபதி அய்யாச்சாமி தீட்சிதர் (பிராமணர்) அவர்கள் கால்டுவெல் பாதிரியாரின் பொய் பிரச் சாரத்தை கடுமையாக எதிர்த்தார். அதுமட்டுமன்றி நாடார்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இங்கு வந்து குடியேறிய ‘‘வந்தேரிகள்’’ அல்ல என்றும், அதற்கு மாறாக அவர்கள் தமிழகத்தை ஆண்ட பாண்டிய குலத்தை சார்ந்தவர்கள், உயர்ந்த வம்சத்தை சார்ந்தவர்கள் எனவும் ஸ்ரீ வைகுண்டம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார். மடாதிபதி யின் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு நாடார்களின் ஆலய பிரவேச தடுப்பு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

நாடார்கள் வென்றனர். இது மட்டும் அல்லாமல் நாடார்கள் சமுதாயம் முழுமைக்கும் பாசூர் மடாதிபதியும் அவ்வூர் அந்தணர்களும் 18,19,20ஆம் நூற்றாண்டில் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். நாடார்களின் ஆன்மீக மற்றும் பொது வாழ்விற்கு இவர்கள் பெரும் துணையாய் விளங்கியுள்ளனர். இதன் காரணமாகவே காசிப்பழ நாடார் அவர்கள் 1952ல் எழுதியுள்ள ‘‘உமரிக்காடு ஸ்தல வரலாறு’’ எனும் நூலில் நாடார்களின் குருக்களாக பாசூர் அந்தணர்களை குறிப்பிட்டுள்ளதை நாம் காணலாம். பாசூர் அந்தணர்களின் சேவையை மேலும் தெரிய விரும்பினால் www.sishri.org எனும் வலை தளத்தை அல்லது விருதுநகர் வன்னியபெருமாள் மகளிர் கல்லூரி சரித்திர பேராசிரியை முனைவர். சாரதாதேவி அவர்களின் நாடார்கள் பற்றிய ஆராய்ச்சி நூலில் காணலாம்.

‘‘பாம்பையும், பார்ப்பானையும் ஒன்றாக கண்டால் முதலில் பார்ப்பானை அடி’’ என்ற ஈவேரா பெரியாரின் பார்ப்பன கசப்பு வார்த்தைகளை பாசூர் அந்தணர்கள் பொய் என அதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்பே நிரூபித்துள்ளனர். பாம்பையும், பார்ப்பன னையும், அன்னிய பாதிரியையும் ஒரு சேர கண்டால் முதலில் அன்னிய பாதிரியையும் பின் பாம்பையும் மட்டும் அடி என்பேதே உண்மையான கருத்தாகும். இந்த உண்மை இன்று வரை மறைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி நாடார்களை கேவலமாக சித்தரித்த கால்டுவெல் பாதிரியை ‘‘திராவிட குருவாக’’ ஏற்றுள்ள திராவிட இயக்கங்களின் செயல்கள் அருவறுக்கத்தக்கவை. பாதிரிக்கு அவர் வாழ்ந்த இடையன் குடியில் நினைவிடம் அமைந்துள்ள தமிழக அரசின் செயல் நாடார்களை மிகவும் புண்படுத்துவதாகவும் உள்ளது.

### 10. கால்டுவெல்லுக்கு எதிர்ப்பு

சாணார்களைப் பற்றி கால்டுவெல் எழுதிய கருத்துக்கள் அக்காலக்கட்டத்தில் கிறித்துவ நாடார்கள் மத்தியிலும் கூட பெறும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. எதிர்ப்பை முன்னின்று நடத்தியவர் அருமை நாயகம் என்ற சட்டாம்பிள்ளை எனும் கிறித்துவ சாணார். இவர் கொற்கை கிராமத்தை சார்ந்த பணக்கார சாணார். இவரைத் தவிர சாமுவேல் சற்குணர், ஞானமுத்து நாடார் ஆகிய கிறித்துவ சாணார்களும் கால்டு வெல் பாதிரியின் சாணார்கள் பற்றிய கருத்துக்களை கடுமையாக சாடினர். கால்டுவெல் தமிழ்ச் சரித்திரத்தை சரியாக புரியாதவர், பொய்யர்,

ஒரு சில நடப்புகளை உலக நடப்பு என பேசக்கூடியவர் என குறிப் பிட்டுள்ளனர்.

(பக்கம் 197 - 202, Robert Caldwell: A Scholar - Missionary in Colonial South India - by Vincent Kumaradas)

மேற்கத்திய பாதிரிகள் தங்கள் விருப்பம் போல் உண்மைக்கு மாறாக பைபிளை மொழி பெயர்க்கின்றனர் என்பது சட்டாம்பிள்ளையின் குற்றச்சாட்டு. சிலுவை வணக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றும், இந்திய கிறித்துவர்களை இந்து கிறித்துவர்கள் என்றே அழைக்கப்பட வேண்டும் என்றும் இவர் வலியுறுத்தினார். சர்ச்சுகளில் பழைய ஏற்பாட்டின் அடிப்படையிலே வழிபாடு நடத்தப்பட வேண்டும் என்றும், மொழி பெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாடு மேற்கத்திய கிறித்துவர்களின் பொய்யை பரப்பக் கூடியது என்றும் அதனை நிராகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். ஒழுக்கக் குறைவான ஐரோப்பிய கிறித்துவ பாதிரிகள் ''எந்தவிதத்திலும் தாழ்ந்து போகாத ஒழுக்க முறைகளையுடைய இந்துக்களிடையே மதப் பிரச்சாரம் செய்ய தகுதியற்றவர்கள்'' என கர்ச்சித்தார். இவர் ஜெருசலேம் யூத கோவில் களின் சாயலில் (இவரால் மேற்கத்திய கிறித்துவம் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது முன்பே குறிக்கப்பட் டுள்ளது.) ஒரு சர்ச்சினை நாசரேத் அருகிலுள்ள மூக்குபேரி எனும் சிற்றூரில் அமைத் தார். அதில் இந்து முறைப்படி படையல் படைத்தும், சாம்பிராணி தூபமிட்டும் வழிபாடு நடத்தினர். (பக்கம் 49-56 காலச்சுவடு-16, டிசம்பர் 1996)

சாணார்களின் எதிர்ப்பை சந்தித்த கால்டுவெல் தனது ''திருநெல் வேலி சாணார்கள்'' எனும் புத்தகத்தை திரும்பப் பெற்றார். ஆனால் சாணார் களை பற்றிய தனது கருத்தை திரும்பத் திரும்ப கூட்டங்களில் வலியுறுத் தினார் என்பது மட்டுமன்றி தனது கருத்தினை திரும்பப் பெற மறுத்துவிட்டார் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

## 11. கால்டுவெல்லின் திராவிட மொழி ஒப்பிலக்கணம்-ஓர் பொய் பித்தலாட்டத்தை அடிப்படையாய் கொண்டது.

சமஸ்கிருதமும், தமிழும் இறைவன் சிவபெருமானால் உலகிற்கு வழங்கப்பட்ட இரு மொழிகளாகும். சமஸ்கிருதம் இறை வனை வழிபட தேவ மொழியாகவும், தமிழ் தொடர்பு மொழியாகவும் இறைவனால் படைக்கப்பட்டன. இரண்டிலும் உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய்

எழுத்து, இலக்கணம் உண்டு. வேறு அன்னிய மொழிகளில் இவ்விலக் கணம் கிடையாது சமஸ்கிருதத்திற்கு 51 எழுத்துக்கள், தமிழுக்கு 30 எழுத்துக்கள், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கு 51 எழுத்துக்கள். இம்மொழிகள் பேச்சுவாக்கில் தமிழையும், எழுதுவதில் சமஸ்கிருதத்தையும் போன்றது. (நன்றி: குருகுல தென்றல் ஆகஸ்ட் 2009.

சமஸ்கிருதம் மற்றும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பிளவுபடுத்தி, பிரிவினை எனும் நஞ்சைக் கலந்திட கால்டுவெல் திட்டமிட்டார். அதன் வழியில் உருவாக்கப்பட்டதே ''திராவிட மொழி ஒப்பிலக்கணம்'' எனும் நூலாகும். ஐம்பத்தி ஒரு எழுத்துக்களைக் கொண்ட மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளை 30 எழுத்துக்களைக் கொண்ட தமிழுடன் இணைத்து இவை திராவிட மொழிக்குடும்பம் எனவும், சமஸ்கிருதத்துடன் திராவிட மொழிக் குடும்பம் சற்றும் தொடர்பு இல்லாதது எனும் உலக மகாபொய்யை உருவாக்கினார். ஆனால் தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் சமஸ்கிருதம்-தமிழ் கலப்பால் உருவானவை என்பது இன்று உலகம் ஏற்கும் உண்மை.

### 12. இதர அன்னியப் பாதிரிகள்

கால்டுவெல் பாதிரியாருக்கு சமகாலத்தவரான ஜி.யு.போப் எனும் பாதிரியும் திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கி லத்தில் மொழிபெயர்ப்பதாக கூறி அதனில் கற்பனையாக கிறித்துவ கருத்துகளை திணித்த ''இடை சொருகலாம்''. இவர்தான் வேத மதமாகிய இந்து சமயம் வேறு, சைவ சித்தாந்தம் வேறு எனும் விஷக் கருத்தை தமிழ்நாட்டில் ஊன்றினார். பிரிவினைவாதத்தை அடிப் படையாகக் கொண்ட இந்தப் பொய் கோட்பாட்டிலிருந்து சைவ சித்தாந்த பண்டிதர்கள் சிலர் இன்னும் விடுதலையாகவில்லை என்பது நாம் காணும் இன்றைய நிலைமை. இது போன்ற திரிபுவாத, பிரிவினைவாத கருத்துக்களை பரப்பிய இதர அன்னிய பாதிரியார்கள்/அன்னியர்கள் மேக்ஸ்முல்லர், குளுனி பாதிரியார், வீரமாமுனிவர், கேமரர் (A.F.Cammerer) ஆகியோர் ஆவார்கள்.

### 13. இன்றைய நிலவரம்

மேற்கத்திய மதமும் (கிறித்துவம்), பொருளாதாரமும் மரணப் படுக்கையில் இறுதி மூச்சை விடுவதற்கு தயாராக இருக் கின்றன. அவை பொருளாதார மற்றும் ஆன்மீக சரிவின் இறுதி கட்டத்தில் உள்ளன.

முந்நூறு ஆண்டுகளாய் உலகை தனது ஆதிக்கத்தில் வைத்திருந்த கிருத்துவ நாடுகள் தங்களின் இறுதிச் சரிவை சந்திக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இன்னும் 50 ஆண்டிற்குள் மேற்கத்திய கிறித்துவ நாடு களின் ஆன்மீகமும, பொருளாதாரமும் முற்றுப்புள்ளி அடைந்து விடும். ஒரு காலத்தில் இங்கிலாந்தின் காலனியாக இந்தியா இருந்தது. வருங்காலத்தில் இந்தியாவின் ஆன்மீக - பொருளாதார காலனியாக இங்கிலாந்து மாறினாலும் ஆசசரியப்படுவதற்கு இல்லை. இந்தியா பெரும் ஆன்மீக பொருளாதார சக்தியாய் இன்னும் 50 ஆண்டிற்குள் திகழ்ந்துவிடும். அதற்கு முன்னர் இந்தியாவை கிறுத்துவ மயமாக்க அன்னிய / உள்நாட்டு மதக்குருக் களும் அவர்தம் சகோதரர்களும் விறுவிறுப்பாய் பணியாற்றி வருகின்றனர். பெரும் பணம் மற்றும் சர்வதேச அரசியல் செல்வாக்கு அவர்களுக்கு கிடைத்துள்ளது. மதசார்பற்றதாக தங்களை கூறி கொள்ளும் அரசியல்வாதிகள், பொது உடமைவாதிகள், திராவிட கட்சிகள் மற்றும் மனித உரிமைக் கழகங்கள், பத்திரிக்கைகள், தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களின் உதவியும் இவர்களுக்குப் பெருமளவில் உண்டு. இத்தகைய அசாதாரண சூழ்நிலையில் அன்னிய மற்றும் உள்ளூர் மதக்குருக் களின் பிரிவுவாத, திரிவுவாத முயற்சியை முறியடித்து நமது இந்திய திருநாட்டை வல்லரசாகவும், உலகின் குருவாகவும் ஆக்க வேண்டியது நமது கடமை.

எனவே இன்றைய அரசியலில் இந்துக்கள் பார்வையாளராக ஒதுங்கிட வேண்டாம். பங்கேற்பாளராக பணியாற்றிட முன்வர வேண்டும். தங்களது செல்வத்தின் ஒரு பகுதியை இந்து தர்ம பாதுகாப்பு மற்றும் பரப்புதலுக்கு செலவிட முன்வர வேண்டும். அப்போதுதான், அப்போது மட்டுமே இந்துக்களின் குடும்பமும், குலமும், மொழியும், வாழ்ந்திடும் நாடும் செழித்திடும். வாருங்கள் இதன் பொருட்டு சேர்ந்து பணியாற்றுவோம்.

**நெற்றியடி**

இன்றைய சூழலில் நாம் எவ்வளவு புரட்டுகள் செய்தாலும் இந்துக்களை மதமாற்றம் செய்திடல் மிகவும் கடினமானதாகும். காரணம், கிறித்துவ மதத்திற்கு எதிராக பல உண்மையான கோட்பாடுகள் இந்துக்களிடம் உள்ளன. நாம் இன்று கிறித்துவத்தை பரப்பிட பல

உக்திகளையும் பணத்தையும் உபயோகிக்கின்றோம். ஆனால் போதுமான வெற்றியை நாம் இன்னும் பெற முடியவில்லை. இதை போன்ற வசதி வாய்ப்பு இந்துக்களுக்கு குறிப்பாக பிராமணர்களுக்கு கிடைக்குமானால் மேற்கு ஐரோப்பா முழுமையையும் சிவா, விஷ்ணு வழிபாட்டிற்கு கொண்டு வந்துவிடுவார்கள்.

-பிரான்ஸ் நாட்டு பாதிரியா -Abbe Dubois கர்நாடகாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் பணியாற்றியபோது எழுதிய இவரது கடிதம் நாள் : 16.11.1816.

**பாஞ்சஜன்யம் ஆசிரியர் குறிப்பு:**

***நம்மில் பெரும்பாலானோர் இதுபோன்ற கட்டுரைகளைப் படிப்பதில்லை. ஆழ்வார் ஆசாரியர்களைப் பற்றிய அனுபவத்தோடு நமது சிந்தனை முற்றுப் பெற்றுவிட்டதாக எண்ணம் கொண்டுள்ளோம். நம்முடைய ஸித்தாந்தத்தின் வேரிலேயே விஷத்தைச் செலுத்துவோர் நாடெங்கும் மலிந்துள்ளனர். இவர்களை இனம் கண்டு கொண்டு, விசிஷ்டாத்வைதம் என்ற ஆலமரத்தின் நிழலிலே இளைப் பாறிக் கொண்டிருக்கும் மடாதிபதிகள், ஆசார்ய புருஷர்கள், பிரபல வித்வான்கள், பிரபமில்லாத வித்வான்கள், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், மேல்நாட்டில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வரும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆகிய அனைவருடைய குறிக்கோளும் இந்த ஆலமரம் பட்டுப் போகாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என்ப தாகவே இருக்கவேண்டும்.***

***சமூகத்தை நலிவுறச் செய்யும் பல்வேறு செயல்கள் தற்போது அரங்கேறி வருகின்றன. நம்முடைய பண்பாட்டின் சின்னமான திருக் கோயில்களில் மரபுமீறல்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. பண்பாட்டுச் சீரழிவு தொற்றுநோய் போல அனைத்து ஸ்ரீவைஷ்ணவர் களிடம் காணப்படுகிறது. வேதகாலத்து லோகாயதனை விஞ்சும் அளவிற்கு நாம் மாறிவிட்டோம். திரு. காசிவேலுவின் இந்தக் கட்டுரை அனைத்துத் தரப்பு மக்களிடம் கொண்டு செல்லப்படவேண்டும். கட்டுரை ஆசிரியர் விருப்பத்திற்கு இணங்க நூல் மதிப்பீட்டிற்கு வந்த இந்த நூல் முழுவடிவில் இம்மாதப் பாஞ்சஜன்யம் இதழில் இடம் பெற்றுள்ளது. இந்தக் கட்டுரை மிகச் சிறந்ததொரு ஆராய்ச்சி நூலாகும். இந்தக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் மற்றையோரிடம் இந்த நூலின் பெருமையை எடுத்துக்கூறி அவர்களையும் உண்மைகளை அறிந்து கொள்ளச் செய்யவேண்டும். இதுவே நாம் இந்து மதத்திற்குச் செலுத்தக்கூடிய நன்றிக்கடனாகும்.*** ★★★

# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச்சுவடுகள்

*இதழ் 138இன் தொடர்ச்சி. ஆசிரியர்-ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.*

## தனித்தெலுங்கான வேண்டி எழுந்த கிளர்ச்சி

1956ஆம் ஆண்டு ராயல்சீமா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது. பல ஆண்டுகள் நிஜாமின் ஆட்சியின்கீழ் இருந்து வந்தது தெலுங் கானாப் பகுதி. இவ்வாறு ஆந்திரமாநிலம் உருவாக்கப்பட்ட போது பொருளாதார ரீதியில் பின்தங்கிய பகுதியாக விளங்கியது தெலுங் கானா. 1967ஆம் ஆண்டு தனித்தெலுங்கானா கோரிக்கை வலுப் பெற்றது. 1969ஆம் ஆண்டு இந்தக் கோரிக்கை வலுப்பெற்று தெலுங் கான பகுதி முழுவதிலும் பல்வேறு வகைப் போராட்டங்கள் நிகழ்ந்தன.

## விசாகப்பட்டினத்தில் இரும்பு உருக்கு ஆலை நிறுவ நடைபெற்ற கிளர்ச்சி

1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விசாகப்பட்டினத்தில் இரும்பு உருக்கு ஆலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து பெரியதொரு போராட்டம் நிகழ்ந்தது. சாலைமறியல், ரயில்வண்டிகளை நிறுத்துவது, கடைகளில் புகுந்தது. சாலை மறியல் ரயில்வண்டிகளை நிறுத்துவது, கடைகளில் புகுந்து கொள்ளை யடிப்பது, அலுவலகங்களில் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்வது போன்றவற்றில் மாணவர்களும், மக்களும் ஈடுபட்டு வந்தனர். விசாகப்பட்டினம் ரயில் நிலையத்திற்குத் தீ வைக்கப் பட்டது. விசாகப்பட்டினம் கலங்கரை விளக்கம் மற்றும் வானொலி நிலையம் ஆகியவற்றிற்கும் தீ வைக்கப்பட்டது. விசாகப்பட்டினம் வழியாகச் செல்லும் ரயில்கள் வேறு பாதைகளில் செலுத்தப்பட்டன.

மத்திய அரசு தலையிட்டு இரும்பு உருக்கு ஆலை அமைக்கப் படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த பின் இந்தப் போராட்டம் முடிவிற்கு வந்தது. அப்போது மாவட்ட

ஆட்சியாளராக இருந்த திரு. அபிட் உசேன் என்பவர் இந்தப் போராட்டத்தின்போது செயல்பட்டதை அனைவரும் வியந்து பாராட்டினர். இவர் பின்னாட்களில் திட்டக்கமிஷன் உபதலைவ ராகவும், அதன்பிறகு அமெரிக்காவில் இந்தியத் தூதராகவும் பணியாற்றி வந்தார். இந்தப் போராட்டத்தின்போது எண்ணெய்க் கிடங்கிற்குச் சென்று வருவதற்குச் சரியான பேருந்து வசதிகள் அமைந்திருக்கவில்லை. கடைத்தெருவிற்குச் செல்பவன் உயிரோடு வீடு திரும்புவானா என்ற அச்சம் எங்கும் நிலவியிருந்தது.

**பீஹாரில் பஞ்சம்**

இதே காலகட்டத்தில் வடநாட்டில் பீஹார் மாநிலத்தில் வரலாறு காணாத பஞ்சம் நிலவியிருந்தது. பழங்குடி மக்கள் அதிக அளவில் வாழும் Monghyr மாவட்டத்தில் மக்கள் பலவகைப்பட்ட கிழங்கு களைத் தின்று உயிர் வாழ்ந்து வந்தனர். உயிர்நிலைப்பதற்குத் தேவையான குடிநீர், கால்நடைகளுக்குத் தீவனமான வைக்கோல் மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஏழை மக்கள் தாங்கள் உண்பதற்கான உணவுப்பொருள்களை ஆங்காங்கே கொள்ளை யடித்து சேகரித்துக் கொண்டனர். இந்தியாவின் பொருளாதாரம் பல வகையிலும் பாதிப்பை அடைந்தது.

**பசு வதைத் தடுப்புச் சட்டம் இயற்றக்கோரி எழுந்த போராட் டத்தில் வெடித்த வன்முறை**

1966ஆம் ஆண்டு நாடெங்கும் பசுவை உணவாகக் கொள்வதற்குக் கொல்லப்படுவதை எதிர்த்து மிகப்பெரியதொரு போராட்டம் வடஇந்தியாவில் நடைபெற்றது. 6.11.1966ஆம் நாள் டில்லி மாநகரில் 1லட்சம் சாதுக்களும், பொதுமக்களும் கைகளில் திரிசூலத்தையும், ஈட்டிகளையும் ஏந்திக்கொண்டு ஒன்று திரண்டனர். ஊர்வலத்தின் முடிவில் பெரியதொரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ராமேஷ்வராநன் என்பாருடைய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவர் தம்முடைய உரையில் பசு வதைத்தடைச் சட்டம் உடனடியாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்திப் பாராளுமன்றத்தி முற்றுகையிடுமாறு அறை கூவல் விடுத்தார். பாராளுமன்றத்தைச் சுற்றிலும் காவல் காத்து வந்த காவல்துறையினர் மீது பொது மக்களும், சாதுக்களும் கற்களையும், ஈட்டிகளையும், திரிசூலத்தையும் எறிந்தனர். இதன் விளைவாகப் பெரியதொரு கலவரம் நிகழ்ந்தது. கண்ணீர்ப் புகைக்குண்டுகள்

வீசப்பட்டன. இதனால் ஆத்திரம் அடைந்த சாதுக்கள் தாங்கள் சென்ற வழியில் காணப் பட்ட பல்வேறு அரசு அலுவலகங்களையும், வானொலி நிலையத் தையும், திரு.காமராஜரின் இல்லத்தினையும் தீ வைத்துக் கொளுத்தினர். 250 கார்கள், 150 இருசக்கர வண்டிகள் எரிக்கப்பட்டன. 1947 ஆம் ஆண்டு நடந்த மதக்கலவரங்களுக்குப் பிறகு மிகப்பெரிய அளவில் வன்முறை வெடித்தது 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்தான்.

'நக்சலைட்டுகள்' என்ற பெயரில் தற்போது தீவிரவாதத் தில் ஈடுபட்டுள்ளனர் ஒரு கூட்டத்தினர். 1967ஆம் ஆண்டுதான் மேற்கு வங்காள மாநிலத்தில் 'நக்சல்பாரி' என்ற ஊரில் போராடியவர் களுக்கு இந்தப்பெயர் வழங்கப்பட்டது. அந்தச்சொல் தற்போது அரசிற்கு எதிராகப் போராடும் அமைப்பாய் வளர்ச்சி பெற்றுள்ளது. 'நக்சலைட்டு'களை எவ்வாறு ஒடுக்குவது என்பதில் ஒரிஸ்ஸா, ஆந்திரப்பிரதேஷ், பீஹார், சட்டீஸ்கர், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் தடுமாற்றம் கொண்டுள்ளன. இவர்களுடன் 'மாவோ யிஸ்ட்டுகள்' என்றதொரு தீவிரவாதக் கூட்டமும் பெரு மளவில் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றது. ***(அவ்வப்போது மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஒரு கூட்டத்தைக் கூட்டுவார். இந்தப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டுமென்று அரசியல் தலைவர்கள் முழக்கமிட்டு விட்டுச் சென்று விடுவர். அதன்பிறகு எந்த முன்னேற்றமும் காணப்படாது. நக்சலைட்டுகளை உருவாக்குவதே சுரண்டலில் ஈடுபட்டிருக்கும் நம் அரசியல்வாதிகள் தான். வறுமையிலேயே வாடிக்கொண்டிருக்கும் பழங்குடி மக்களுக்கு அரசு அறிவிக்கும் எந்தத் திட்டங்களும் சென்றடைவதில்லை. அரசியல்வாதிகள் தான் அந்தத் திட்டங்களை நடைபெறச் செய்யாமல் தடுத்து விடுகின்றனர்.)***

**நக்சலைட்டுகள் உருவான உருவாக்கப்பட்ட வரலாறு**

1967ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் விளைவாக மேற்குவங்காளத்தில் 'பாங்ளா' காங்கிரஸ் கட்சியினை தலைவரான திரு.அஜாய் முகர்ஜியுடன் இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகள் இணைந்து மந்திரி சபை அமைத்தனர். இதன் விளைவாக ஜோதிபாசு துணை முதலமைச்சரானார். அந்த ஆண்டுதான் டார்ஜீலிங் மாவட்டத்தில் நிலஉரிமைப் போராட்டம் தொடங்கியது. அந்த மாவட்டத்தின் மேற்கெல்லை நேபாள நாட்டின் ஒரு பகுதியாகும். கிழக்கில் பாகிஸ்தானும் ***(பாகிஸ்தானின் ஒரு பகுதியாக விளங்கியது கிழக்கு வங்காளம். முஜிபூர் ரஹ்மான் தலைமையில் அங்கு நிகழ்ந்தக் கிளர்ச்சியின்***

***விளைவாக பங்களாதேஷ் உருவானது)*** மற்றைய திக்குகளில் திபெத், பூடான், சிக்கிம் ஆகிய நாடுகளின் எல்லையோரப் பகுதிகள் இருந்து வந்தன. எங்கு நோக்கிலும் தேயிலைத் தோட்டங்களையே காணலாம்.

பெரும்பாலான நிலப்பகுதிகள் ஆங்கிலேயேக் குடிமக்களுக் குச் சொந்தமாக இருந்தன. அந்தப் பகுதியில் நிலஉரிமைப் போராட்டங்கள் பெருமளவில் நிகழ்ந்து வந்தன. டார்ஜிலிங் மாவட்டத்தின் ஒரு பகுதியான 'நக்சல்பாரி'யில் கிரிஷக்சமிதி என்னும் ஓர் அமைப்பு இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. கனுஸந்யால் என்னும் மத்தியதர வகுப்பைச் சார்ந்த ஒருவர் இந்த இயக்கத்தின் தலைவராக விளங்கி வந்தார். ஏழை மக்களை வெளியேற்றி உணவுப்பொருள்களைப் பதுக்கி வந்த நிலச் சுவான் தார்களுக்கு எதிரான போராட்டத்தில் சமிதி ஈடுபட்டிருந்தது. அவ்வாறு நடந்த ஒரு போராட்டத்தின் போது காவல் துறையைச் சார்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நடந்த போராட்டத்தின்போது ஏழை விவசாயிகள் ஆயுதங்களை ஏந்தி நிலச் சுவான்தார்கள் பலரின் தலைகளைச் சீவிச் சாய்த்தனர். தாங்கள் சார்ந்துள்ள இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் அமர்ந்து இருப்பதால் தங்களுக்கு நியாயம் கிடைக்கு மென்று நக்சல்பாரி விவசாயிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் நம்பிக்கைப் பொய்த்துவிட்டது. சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி அப்போதைய அரசாங்கம் 1500 காவலர்களை நக்சல்பாரியில் தங்க வைத்தது. கனுஸந்யால் சிறையில் அடைக்கப்பட்டார். மற்றைய போராளிகள் அடர்ந்த காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

நிலச்சுவான்தார்கள் மற்றும் நலிந்த பிரிவினருக்குச் சொல்லொணாத் துன்பங்களை அளிப்போர்களை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு 'நக்சலைட்' என்ற பெயர் சூட்டப்பட்டது. கம்யூனிஸ்ட் சீன அரசு நக்சலைட்டுகளின் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்ததோடு மட்டுமல்லாமல் தேவையான ஆயுதங் களையும் எல்லையைத்தாண்டி அவர்களுக்கு அளித்து வந்தது. இவ்வாறு மேற்குவங்கத்தில் தோன்றி 'நக்சலைட் இயக்கம்' ஆந்திர மாநிலத்தின் தெலுங்கானா மற்றும் ஸ்ரீகாகுளம் பகுதிகளில் பரவத் தொடங்கியது. ஸ்ரீகாகுளத்தில் பள்ளி ஆசியரான வேம்பட்டு சத்தியநாராயணா என்பவர் நக்சலைட்டுகளின் தலைவராக விளங்கி வந்தார். தெலுங்கானா பகுதியில் தரிமாலா நாகிரெட்டி என்பார் நக்சலைட் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். பல்வேறு பகுதி

களைக் கண்காணிப்பதற்கு ‘தளம்’ என்ற அமைப்பு உருவாக்கப் பட்டது. மேற்குவங்கத்தில் அஜாய்முகர்ஜியின் தலைமையிலான ஆட்சி ஓர் ஆண்டுகளுக்குமேல் நீடிக்கவில்லை. ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. மேற்கு வங்கத்தில்தான் Gherao எனப்படும் ‘அதிகாரிகளை இருக்கையில் வைத்து சிறைப்பிடிப்பது’ என்னும் புதுவகைப் போராட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. (1969ஆம் ஆண்டின் முதல் ஆறுமாதத்தில் 1200 Gheraos மேற்குவங்கத்தில் அரங்கேறின.)

## Confrontation between the Parliament and the Judiciary

இந்திய அரசியல் சட்டம் இந்த நாட்டில் வாழும் குடிமகனுக்கு அடிப்படை உரிமைகள் பலவற்றை வழங்கியுள்ளது. இந்திய நாட்டின் நாற்பெரும் தூண்களாக விளங்குபவை, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் அமைப்பான பார்லிமென்ட், உச்சநீதி மன்றம் மற்றும் அதன் மேற்பார்வையின் கீழ் அமைந்துள்ள நீதி மன்றங்கள், அரசு அலுவலர்கள் மற்றும் உண்மையை நிலை நாட்டப்பாடுபடும் ஊடகங்கள். இவற்றில் அவ்வப்போது பார்லி மென்ட்டிற்கும், நீதித்துறைக்கும் இடையே மோதல்கள் நிகழ் வதுண்டு. உச்சநீதி மன்றத்திற்கு மட்டும் முழுமையான அதிகாரம் உண்டு என்றும், இல்லை இல்லை பார்லிமென்ட்டிற்குத்தான் முழு அதிகாரம் உண்டு என்றும், யாருக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அதிக முக்கியத்துவம் தந்துள்ளது என்பதைக் குறித்த தீர்ப்புகளும். அந்தத் தீர்ப்பினை இல்லையெனச் செய்வதற்கு புதுப்புதுச் சட்டங்கள் இயற்றப்படுவதும் இந்திய அரசியல் வானில் அவ்வப்போது நிகழும் விபத்துகளாகும்.

## 24th Constitution amendment bill

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பலமுறை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு திருத்தத்திற்கு வித்திட்டது தான் ‘கோகல்நாத் வழக்கு’. 1967ஆம் ஆண்டு பிப்ரவரி, 27ஆம் நாள் உச்சநீதி மன்றம் அளித்த ஒரு தீர்ப்பின் விளைவாக அடிப்படை உரிமைகளைப் பற்றிய இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1971ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. அதுவே 24ஆவது அரசியல் அமைப்புச்சட்ட திருத்தமாக 1971ஆம் ஆண்டு பார்லிமென்ட்டில் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக Article 368இல் பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை

திருத்துவதற்கு பார்லிமென்ட்டிற்கு முழுஅதிகாரம் உண்டு என்ற சட்டம் அமுலுக்கு வந்தது. கோகல்நாத் வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அறுவர் பார்லிமென்ட்டிற்கு இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அதிகாரம் இல்லையென்றும், ஐந்து நீதிபதிகள் பார்லிமெண்ட்டிற்கு அந்த அதிகாரம் உண்டு என்று தீர்ப்பு அளித்தனர்.

### ஆயிரம் கப்பல்களிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்த அபூர்வ சிந்தாமணி

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் தான் பணிபுரிந்து வந்தது Operations Department எனப்படும் பகுதியாகும். மக்களுக்கு வினியோகிக்கப்படவேண்டிய பல்வேறு எண்ணெய்களை Ships, Pipeline. Oil Tankers ஆகியவற்றின் மூலமாகக் கிடங்குகளில் சேமித்து மக்களின் தேவைக்காகப் பல்வேறு இடங்களுக்கு Oil Tankers, Tank Lorries, Barrels ஆகியவற்றில் நிரப்பி அனுப்பி வைக்க வேண்டும். விசாகப்பட்டினம் எண்ணெய்க்கிடங்கிற்கு ரஷ்யா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மண்ணெண் ணெய் மற்றும் டீசல் கப்பல்களில் கொண்டு வரப்பட்டன. முன்பே தெரிவித்தவாறு மேற்கு வங்காளத்திலுள்ள Haldia துறைமுகத்திற்கு Hooghly ஆற்றின் ஆழத்தைப் பொறுத்து (Draft) அங்கு செல்லும் கப்பல்களிலிருந்து எண்ணெய் விசாகப்பட்டினத்தில் இறக்கப்பட வேண்டும். இதன் விளைவாகப் பல இடர்ப்பாடுகளை எதிர் கொள்ள நேரிட்டது. எண்ணெய்க்கிடங்குகளில் குறிப்பிட்ட கொள்ளளவிற்குமேல் நிரப்ப முடியாது. பாதுகாப்பு விதிகளின்படி ஒரு எண்ணெய் நிரப்பப் பயன்படும் கிடங்கில் (Storage Tank) 4,000 டன்தான் நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் இடமிருந்தாலும் அதன் கொள் ளளவைத் தாண்டி எண்ணெய் நிரப்பப்படக்கூடாது. அதேபோல் மண்ணெய்ணெய் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு Storage Tankஇல் டீசலை நிரப்ப இயலாது. தரக்கட்டுப்பாடு மட்டும் இதற்குத் தடையல்ல. Customs நிர்வாகம் இதற்கு ஒப்புதல் வழங்கவேண்டும். ஒரு எண்ணெய்க் கப்பல் துறைமுகப்பகுதிக்கு வந்து சேர்ந்துவிட்டால் பல்வேறு இடையூறுகளைத்தாண்டிப் பணிபுரியவேண்டும். நான் இந்தியல் ஆயில் நிறுவனத்தில் பணிபுரிந்த 34 ஆண்டுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கப்பல்களிலிருந்து பல்வேறு வகைப்பட்ட எண்ணெய்களை இறக்குமதி செய்திருக்கிறேன். ஏற்றுமதியும் செய்திருக்கிறேன். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் நான் ஒரு ஆயிரம் கப்பல்களைக் கண்ட அபூர்வ சிந்தாமணி. (தொடரும்)

# தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ்அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் செயல் அலுவலர் அளித்த பதில்

பாஞ்சஜன்யம் இதழ் எண். 138இல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திருமாலிருஞ்சோலை கோயில் நிர்வாக அதிகாரிக்கு 2.10.2010 அன்று அனுப்பப்பட்ட கடிதம் வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட அருள்மிகு கள்ளழகர் திருக் கோயில் துணை ஆணையர் தமது 23.11.2010 தேதியிட்ட கடித எண். 2410/2010/அ1 நாள்: 23.11.2010. மூலம் கீழ்க்கண்ட பதிலைத் தெரிவித்துள்ளார்.

**1. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு கீழ்கண்ட விபரப்படி சொத்துக்கள் உள்ளது.**

| **நிலங்கள்** | - | **ஏக்கர்.செண்ட்.** |
|---|---|---|
| நஞ்செய் | - | 5.23 |
| புஞ்செய் | - | 79.26 |
| தோப்பு | - | 5.79 |
| கடைகள் | - | 28 |
| மனைகள் | - | 3 |

**வருட வருமானம்( லட்சத்தில்)**

| | | |
|---|---|---|
| நஞ்செய் | - | 2.11 |
| புஞ்செய் | - | 0.09 |
| கடைகள் | - | 13.22 |
| மனைகள் | - | 4.19 |

**2. 1419ம் பசலியில் விபரம்:**

1. நிலங்கள் குத்தகை வருமானம் ரூ. 2,11,519.00
2. அர்ச்சனை டிக்கட் மூலம் வருமானம் ரூ. 17,22,390.00

3. உண்டியல் காணிக்கை மூலம் ரூ.1,47,59,778.00

**3.** வைகானஸ ஆகமப்படி மேற்கொள்ளப்படவேண்டிய ஆராதனங்கள், கண்டருளப் பண்ணவேண்டிய ப்ரஸாதங்கள், தூப தீபங்கள், திருமாலைகள் ஆகியவற்றிற்கு உரிய பட்டியல் தயாரிக்கப்பட்டு அவ்விதமே அவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா? இவை கண்காணிக்கப் படுகின்றனவா?

**பதில்-**ஆம்.

**4.** **பதில்-**இத்திருக்கோயிலில் ஆறுகால ஆராதனைகள் தினசரி நடை பெற்று வருகிறது. அவை முறைப்படி நடைபெற்று வருகிறது.

**5.** **பதில்-**1965ஆம் ஆண்டுகளுக்கு முன்பு வழக்கிலிருந்த திட்டப் பதிவேடு இல்லை. தற்போது 2006ஆம் ஆண்டில் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்ட திட்டப்பதிவேட்டின் அடிப்படையில் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**6.** 1975 ஆம் ஆண்டு வருமானம் - ரூ. 6,79,438,00

2010 ஆம் ஆண்டு வருமானம் - ரூ. 8,91,74,607.00

**7.** ஆதி முதல் என்பது எந்த ஆண்டைக் குறிக்கிறது என அறிய இயல வில்லை. தற்போது சன்னதிகள் விபரம்.

1. உடையவர்-இராமானுஜர் சன்னதி
2. அருள்மிகு கிருஷ்ணன் சன்னதி
3. குடவரை அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதி
4. அருள்மிகு இராமர் சன்னதி
5. ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் சன்னதி
6. அருள்மிகு தாயார் சன்னதி
7. அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி
8. அருள்மிகு யோக நரசிம்மர் சன்னதி
9. அருள்மிகு பூமிவராகர், அருள்மிகு லெட்சுமி நரசிம்மர், லெட்சுமி நாராயணன், அருள்மிகு பார்த்தசாரதி ஸந்நிதி.
10. அருள்மிகு ஆண்டாள் சன்னதி.
11. அருள்மிகு விஸ்வரூப கிருஷ்ணன் சன்னதி

12. அருள்மிகு ஹய(க்)கீரிவர் சன்னதி

13. அருள்மிகு சரஸ்வதி சன்னதி

14. அருள்மிகு தசாவதார சன்னதி

15. அருள்மிகு மேட்டுகிருஷ்ணன் சன்னதி

16. அருள்மிகு கெருடன் சன்னதி

17. அருள்மிகு தும்பிக்கை ஆழ்வார் சன்னதி

18. அருள்மிகு சோலைநாச்சியார் சன்னதி

19. அருள்மிகு சீனிவாச பெருமாள் சன்னதி

20. அருள்மிகு நரசிம்மர் சன்னதி

21. அருள்மிகு விஷ்வக்சேனர் சன்னதி

22. அருள்மிகு சேத்திர பாலகர் சன்னதி

23. அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் சன்னதி (மூலஸ்தானம்)

24. அருள்மிகு மடப்பள்ளி நாச்சியார் சன்னதி

25. அருள்மிகு 18ம்படி கருப்பண்ணசாமி சன்னதி

26. அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதி

27. மலைவாயில் அருகில் சப்தகன்னிமார் சன்னதி

28. அருள்மிகு இராக்காயி அம்மன் சன்னதி

**தற்போது நடைமுறையில் பக்தர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் புண்ணிய தீர்த்தங்கள் மூன்று.**

புண்ணிய தீர்த்தம்:

1. ஆஞ்சநேயர் தீர்த்தம்

2. கெருடாழ்வார் தீர்த்தம்

3. நூபுர கங்கை தீர்த்தம் (சிலம்பாறு)

இவற்றில் பக்தர்கள் நீராடிச் செல்கின்றனர்.

**8. திருமாலையாண்டான் திருவாய்மொழி உரை நிகழ்த்திய இடத்தின் தற்போதைய நிலை என்ன?**

**பதில்**-நல்ல நிலையில் உள்ளது.

**9. நித்ய ஆராதனத்தின்போது ஸ்ரீவைஷ்ணவக் கோயில்களுக்கு**

**உரிய முறையில் தமிழ்ப் பிரபந்தங்களும் வடமொழி வேதங் களும் அந்தந்த காலங்களில் ஓதப்படுகின்றனவா?**

**பதில்-** விஸ்வரூபம் 5.30 மணி

திருப்பாவை காலங்களில் முதலில் திருப்பள்ளி எழுச்சி பாசுரமும், திருப்பாவை 30 பாசுரங்களும் சேவித்து கோஷ்டி நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு பூசை காலத்திலும் இதிகாச புராணங்களும், வேத விண்ணப்பமும் சேவித்துக் கொண்டு வருகிறது. மாலையில் 6.00 மணிக்கு நித்ய அனுசந்தான கோஷ்டியில் பெரியாழ்வார், நம்மாழ்வார் ஆகிய பாசுரங்கள் சேவித்து கோஷ்டி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

காலையில் 8.00 மணி முதல் 11.00 வரை வேத ஆகமங் களின்படி கைங்கர்யம் நடைபெற்று வருகிறது. மாலை ''சுந்தரபாகு ஸ்தவம்'' 132 சுலோகங்கள் மாலை 4.00 முதல் 5.00 மணி வரை பாசுரங்கள் சேவித்து வரப்படுகிறது.

**10.**

**பதில்-**இத்திருக்கோயிலில் வாரந்தோறும் சனிக்கிழமை சொற்பொழிவு நடத்தப்பட்டு வருகிறது.

**11. வைணவ சமய மேம்பாட்டிற்காக நிர்வாஹம் என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது? திருமடைப் பள்ளி 'ஸுத்தம்' மற்றும் சுற்றுச்சூழல் சரியாகப் பேணப்படுகிறதா? தளிகை கைங்கர்யத்தில் ஈடுபட்டுள்ளோர் அவர்களுக்குரிய முறையில் திருமண்காப்பு மற்றும் ஆடைகளை கச்சம்வைத்து உடுத்திக் கொண்டு வருகின்றரா? தளிகை செய்வோருடைய தனிப்பட்ட சுகாதாரம் கண் காணிக்கப்படுகிறதா?**

**பதில்-**சன்னதி அர்ச்சகர்கள் திருமண்காப்பு, பஞ்ச கச்சம் கட்டாய மாக அணிந்து வருகின்றனர். திருமண் காப்பு கைங்கர்யத்தில் உள்ள அனைவரும் அணிந்து வருகின்றனர்.

**12.**

**பதில்-**அருள்மிகு பெருமாளுக்கு நைவேத்தியம் செய்யும் பிரசாதங் கள் காலையும், மாலையும் பக்தர்களுக்கு விநியோகம் செய்யப் படுகிறது.

**13.** **பதில்-**வேத விண்ணப்பம் செய்வோர், திருமடப்பள்ளி பரிசார கர்கள், திவ்யபிரபந்தம் செய்வோர் உரிய முறையில் திருமண் காப்பு

அணிந்து பணிபுரிந்து வருகின்றனர். அர்ச்சகர்கள் திருமண், பஞ்ச கச்சம் அணிந்து வருகின்றனர்.

**14. இந்த சமய அறநிலையத்துறை இந்தக் கோயிலில் கடைபிடிக்க வேண்டிய ஆகமம் மற்றும் சமயம் சார்ந்த மரபுகளைப் பேணி பாதுகாப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது?**

**பதில்-**இத்திருக்கோயியில் வைகானச ஆகமப்படி நடந்து வருகிறது. (இதற்குரிய பதில் பெறப்படவில்லை.)

15. **பதில்-**தேவஸ்தானத்தால் போடப்பட்டது.

16. **பதில்-**மூன்று பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மலை அடிவாரத் திலிருந்து மேலே 3.5கி.மீ வரை செல்கிறது.

17. **பதில்-**அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் பெருமாளுக்குரிய திருவாபரணங்கள் முறைப்படி இந்து சமய அறநிலையத்துறை நகை சரிபார்க்கும் அதிகாரியால் ஆய்வு செய்யப்பட்ட பட்டியல் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை நகை சரிபார்க்கும் அதிகாரி மூலம் சரிபார்க்கப் பட்டு வருகிறது.

18. **பதில்-**திருவாபரணங்கள் எந்தெந்த காலங்களில் யாரால் காணிக்கையாக வழங்கப்பட்டது என்பதற்குரிய ஆவணங்கள் இல்லை.

19. **பதில்-**இத்திருக்கோயிலில் நூபுரகங்கை செல்லும் மலை வாயில் அருகில் பெரியாழ்வார் நந்தவனம் (திருவரசு) திருக்கோயிலால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

20. **பதில்-**கலாபத்தின்போது அழகிய மணவாளன் ஓராண்டுகாலம் திருமாலிருஞ்சோலையில் தங்கியிருந்ததாக வரலாற்று நூல்கள் வழி பெறப்படுகிறது. அவருடைய திருவாராதனத்திற்காக உருவாக்கப்பட்ட கிணற்றில் தற்போது மாந்த்ரிகர்கள் கழிவுப் பொருளையிட்டு பாழ்படுத்தி வருகின்றனர். இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அந்தக் கிணற்றைத் தூய்மை செய்து அந்த இடத்தில் இந்தக் கிணற்றிலுள்ள புனிதநீர் கொண்டு தான் அழகிய மணவாளனுக்கு ஓராண்டுகாலம் திருவாராதனம் மேற்கொள்ளப்பட்டது என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

**பதில்-**இத்தீர்த்தம் உள்பட எல்லா தீர்த்தங்களையும் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. **பதில்-**திருமலை நாயக்கர் மண்டபம் மதுரை தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறது.

22. **பதில்-**இத்திருக்கோயிலில் ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் உடையவர் சன்னதியில் தற்போது பாலாலயம் செய்யப்பட்டுள்ளது. சன்னதியில் பூசைகள் நடத்தப்படவில்லை.

23. **பதில்-**ஜீயர் தொடர் ஆவணங்கள் ஏதும் இத்திருக்கோயிலில் இல்லை என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

24.

| **வ. எண்** | **வழக்கு எண்.** | **தற்போதைய நிலை.** |
|---|---|---|
| 1. | S.L.P 13681/01 | வழக்கு விசாரணை துவங்கப்பட வில்லை |
| 2. | S.L.P 16761/04 in A.S. 563/89 in O.S.171/87 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 3. | S.L.P 16762/04 in A.S.504/02 in O.S.178-82 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 4. | A.S. 462/80 in OS 137/76 | வாதிகள் இறந்துவிட்டபடியால் வாரிசு தாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 5. | S.A.1772/99 | விசாரணை இன்னும் துவங்கப்பட வில்லை. |
| 6. | S.A. 228/02 | விசாரணை நடைபெறவுள்ளது. |
| 7. | W.P.35505/02 | எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரிட்மனு விசாரணையில் உள்ளது |
| 8. | W.P 7775/03 | ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 9. | W.P 3661/03 | எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நிலுவையில் உள்ளது. |

| | | |
|---|---|---|
| 10. | W.P 11882/04 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 11. | W.P 25193/05 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 12. | W.P 4049/06 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 13. | W.A 773/09 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 14. | W.A 806/09 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 15. | W.A 205/09 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 16. | W.A 289/09 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 17. | W.A 4622/09 | விசாரணை நிலுவையில் உள்ளது |
| 18. | O.S. 356/04 | விசாரணை நடைபெற்று வருகிறது. |
| 19. | A.S. 217/06 | விசாரணை நடைபெறவுள்ளது. |
| 20. | O.S 357/05 | விசாரணை நடைபெறவுள்ளது. |
| 21. | O.S. 446/04 | விசாரணை நடைபெற்று வருகிறது. |
| 22. | L.A.C.O.P135/99 | விசாரணை நடைபெற்று வருகிறது. |
| 23. | L.A.C.M.A1/98 | விசாரணை நடைபெற்று வருகிறது. |
| 24. | L.A.C.M.A 42/07 | விசாரணை நடைபெற்று வருகிறது. |
| 25. | O.S.147/08 | விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. |
| 26. | O.S. 323/86 | விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. |
| 27. | O.S. 10/2004 | சார்பு நீதிமன்றத்திலிருந்து முன்சிப் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 28. | O.S. 204/04 | சார்பு நீதிமன்றத்திலிருந்து முன்சிப் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு விசாரணை நிலுவையாக உள்ளது. |
| 29. | O.S. 102/2003 | பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப் பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 30. | O.S. 680/2000 | பிரதிவாதி இறந்துவிட்டதால் வாரிசுதாரர் சேர்க்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ளது. |
| 31. | O.S. 1488/2004 | நிலுவையில் உள்ளது. |
| 32. | O.S. 392/06 | விசாரணை நிலுவையில் உள்ளது. |
| 33. | O.S. 392/06 | விசாரணை நடைபெறவுள்ளது. |
| 34. | O.S. 363/05 | விசாரணை நடைபெறவுள்ளது. |

ஓம். எஸ். கல்யாணி.

# தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.

திருக்குறுங்குடி அழகிய நம்பிராயர் திருக்கோயிலில் பல நூறு ஆண்டுகளாக கோயில் கொண்டிருந்த மஹேந்திரகிரி நாதர்என்றழைக்கப்பட்டு வந்த ‘‘பக்கம்நின்றார்’’ ஸந்நிதி 2004ஆம் ஆண்டு இரவோடு இரவாக அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டதை எதிர்த்து திரு.கோ.சொக்கலிங்கம், ச.சுந்தர சுப்ர மணியன் ஆகிய இருவர் நாங்குனேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (வழக்கு எண். O.S.No.288/04) வழக்குத் தொடுத்திருந்தனர்.

இந்த வழக்கு சென்ற 6 ஆண்டுகளாகப் பல்வேறு நீதி மன்றங்களில் விசாரிக்கப்பட்டு 29-11-2010 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் 2ஆவது மேல்முறை யீட்டு மனுவின்மீது மாண்புமிகு நீதிபதி செல்வி. R.மாலா அவர் களால் இறுதித்தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பில் பக்கம் நின்றார் ஸந்நிதி இடிக்கப்படுவதற்கு முன்பு இருந்த நிலையில் மூன்று மாதத்திற்குள் பேரருளாள ராமானுஜ ஜீயர் கட்டித்தரப் படவேண்டும் என்றும், இந்த ஸந்நிதி இடிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது குற்றவியல் சட்டங்களின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. 6 ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பிறகு இந்தத் தீர்ப்பினைப் பெற்றுள்ளோம். பணபலமும், ஆட்பலமும் கொண்ட T.V.S. நிறுவனத்தின் பல்வேறு அச்சுறுத்தல்கள் அஞ்சாது, **நீதிமன்றங்களில் முன்வைக்கப்பட்ட பொறுத்தமற்ற வாதங்களை முறியடித்து இந்த வெற்றியைத் தேடித்தந்தவர் களில் குறிப்பிடத் தக்கவர்கள் மதுரை உயர்நீதிமன்றக் கிளை**

**வழக்குரைஞர்கள் திரு.வள்ளிநாயகம், திரு. கிருஷ்ணா, திரு. நந்தகுமார், கீர்த்தி மூர்த்தி திரு. சம்பத்குமார், சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் திரு. பிரகாஷ் ஆகியோர் ஆவர்.**

ஸிம்ஹாவலோகந ந்யாயத்தின்படி 2004ஆம் ஆண்டு தொடங்கி அரங்கேறிய நிகழ்ச்சிகளையும், ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தைப் பாதுகாக்கவேண்டிய ஜீயர்கள் குறிப்பாக வான மாமலை கலியன் ராமானுஜ ஜீயர் (30ஆவது பட்டம்) மற்றும் திருக்குறுங்குடி பேரருளாள ராமானுஜ ஜீயர் பட்டத்தை அலங்கரித்த (49) மற்றும் வர்த்தமான பட்டம் (50) ஜீயர் களும் ஸம்ப்ரதாய விரோதமான காரியங்களுக்கு ஊக்கமளித்து வந்தனர் என்பதையும், அவர்களுக்கு உதவியாக ஒரு சில பிரபல வித்வான்கள் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதையும் கீழ்க்கண்ட குறிப்புகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் இந்தக் கட்டுரையில் நீதிபதி. மாலா அவர்கள் எத்தகைய தீர்ப்பை வழங்கியுள்ளார்கள் என்பதையும் கோடிட்டுக் காட்டுவோம்.

*திருக்குறுங்குடியைச் சார்ந்த சைவ வேளாளப் பெரு மக்களின் சார்பில் காலஞ்சென்ற திரு. சொக்கலிங்கம் என்பார் திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2004, ஜூன் மாதம் வழக்கு ஒன்றினைத் தொடுத்தார்.*

*இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்கள் புதிதாகக் கோயில் கட்டுவதற்கு 30.08.2004வரை தடை உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவை எதிர்த்துத் திருக்குறுங்குடி ஜீயர் மடத்தின் சார்பில் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் கீழ்க் கோர்ட் விதித்த தடையை நீக்க வேண்டும் என்று மேல் முறையீடு செய்யப்பட்டது. அந்த முறையீட்டை ஏற்றுக் கொண்ட நீதிபதி மாண்புமிகு திரு.கனகராஜ் அவர்கள் கோயில் கட்டுவதற்கான தடை உத்தரவை பிறப்பிப்பதற்கு கீழ்க்*

*கோர்ட்டிற்கு அதிகாரம் இல்லையென்றும், தடையை உடனடியாக நீக்குவதாகவும் 9.8.2004 தேதியிட்ட உத்தரவில் தெரிவித்தார்.*

*சென்னை உயர்நீதிமன்றத்தில் திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவையின் சார்பில் ரிட்மனு (எண். 28065/04) ஒன்று தாக்கல்செய்யப்பட்டு 13.08.2004 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிர்மனுதாரர்களான கமிஷனர்* HR&CE *மற்றும் திருக்குறுங்குடி ஜீயர் சார்பில் வழக்காடிய வழக்குரைஞர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு நீக்கப்பட்டிருப்பதால் சென்னை உயர் நீதிமன்றம் இந்த மனுவை ஏற்று தடை உத்தரவு பிறப்பிக்கக்கூடாது என்று வாதாடினர். மாண்புமிகு நீதிபதி திரு.பாலசுப்ரமணியன் அவர்கள் தடைஉத்தரவு ஏதும் பிறப்பிக்காமல் வழக்கினை 19.08.2004ஆம்தேதிக்கு ஒத்திவைத்து, ஆணை பிறப்பித்தார்.*

*19.08.2004 அன்று மாண்புமிகு நீதிபதி திருமதி.ப்ரபா ஸ்ரீதேவன் முன்னிலையில் ஹிந்து பக்த ஜன சபை, தமிழ்நாடு சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட்மனு எண். 28044/04 மற்றும் திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவை சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட்மனு எண். 28065/04, ஆகிய இரண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரு தரப்பு வாதங்களைக் கேட்ட மாண்புமிகு நீதிபதி அவர்கள் ஏற்கெனவே மதுரை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் அனைத்து ரிட்மனுக் களையும், மதுரை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.*

*சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் போராட்டத்தின் காரணமாக உயர்நீதிமன்றப் பணிகள் தடைபட்டிருந்ததால் சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கு சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் மதுரைக் கிளைக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. 24.08.2004 அன்று*

*மதுரை உயர் நீதிமன்றத்தில் திருக்குறுங்குடி திரு.சுந்தரராஜன் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சிவன்கோயில் கும்பா பிஷேகம் நடைபெறகூடாது என்றுகோரி ரிட்மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.* **(இவர்தான் தற்போதைய பட்டத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் வர்த்தமான ஜீயராவார். பட்டத்திற்கு வருவதற்குமுன் ஒரு நிலைப் பாடையும், பட்டத்திற்கு வந்தபிறகு மாறுபட்ட நிலைப் பாடையும் கொண்டவர் இவர்.)**

*ஆயினும் மதுரை உயர்நீதிமன்றத்தில் 24.08.2004 அன்று திரு.கோ.சொக்கலிங்கம், ச.சுந்தரசுப்ரமணியன் ஆகியோரு டைய மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மாண்புமிகு நீதிபதி திரு.கனகராஜ் அவர்கள் முன்னிலையில் திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவையின் சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் திரு.சம்பத்குமார், இந்து பக்த ஜன சபை சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் திரு.ராஜகோபாலன் ஆகியோர் ஆஜராகி சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தனர். திரு.கோ.சொக்கலிங்கம், ச.சுந்தரசுப்ரமணியம் ஆகியோருக்காக திரு.வள்ளிநாயகமும், திருக்குறுங்குடி ஜீயருக்காக திரு.T.R.ராஜகோபாலன் ஆகியோர் ஆஜராகித் தம் வாதங்களை முன்வைத்தனர்.*

*சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்ற வாதங் களின் முடிவில் மாண்புமிகு நீதிபதி திரு.கனகராஜ் அவர்கள் 7.9.2004வரை புதிதாகக் கட்டப்பட்டுள்ள சிவன் கோயிலில் கும்பாபிஷேகம் செய்யக்கூடாது என்றும், அனைத்து ரிட் மனுக்களும் 7.9.2004 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்றும் ஆணை பிறப்பித்துள்ளார்.*

*17.09.2004 அன்று விஜய் தொலைக்காட்சியில் திருக் குறுங்குடியில் பக்கம் நின்றாரான சிவன் ஸந்நிதி இடிக்கப் பட்டது சரியே என்ற கருத்தை முன்வைத்து ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி பேரருளாள ராமாநுஜ ஜீயர், ஸ்ரீமத் பரம*

ஹம்ஸேத்யாதி வானமாமலை கலியன் ராமாநுஜஜீயர் ஸ்வாமி, 'கீதாசார்யன்' ஆசிரியர் ஸ்ரீ.உ.வே. வேங்கட கிருஷ்ணன், வைகானஸ ஆகமவித்வான் கோபால பட்டர், உள்ளூர்வாசியான திரு.பாண்டியன் ஆகியோருடைய பேட்டி மட்டும் ஒளிபரப்பப்பட்டது. அவர்கள் கூறிய கருத்துக்களை ஆதாரபூர்வமாக மறுக்கக் கூடியவர்களுடைய பேட்டி அன்றைய தினம் ஒளிபரப்பப் படவில்லை. ஸ்ரீமாந் வேணு ஸ்ரீநிவாஸனுடைய ஸ்தாபனத்தார் தங்களுடைய செயல் களுக்கு நியாயம் கற்பிப்பதற்காக ஒளிபரப்பப்பட்ட Sponsored Programme போல் அந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.

**"நான் ஆகமம் நன்றாகக் கற்றவன், எல்லா சாஸ்த்ரங் களையும் அறிவேன். இவ்வாறு சொல்வதால் என்னை யாரும் அஹங்காரி என்று எண்ணவேண்டாம். திருக்குறுங்குடியில் சிவன் ஸந்நிதி ஆகமத்திற்கு விரோதமாகக் கட்டப் பட்டு உள்ளது. அதை இடித்ததில் எந்தத் தவறும் இல்லை. மடாதி பதிகளாகிய நாங்கள் (திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமி, வான மாமலை ஜீயர் ஸ்வாமி, காஞ்சி ஜயேந்திரர், ஆகியோர்) இந்தச் செயலுக்கு பூர்ண சம்மதம் தெரிவிக்கிறோம்"** என்று தமது (17/09/2004) பேட்டியில் கூறினார்.

நிலைமை இவ்வாறு இருக்கக்கூடுமாயின் கி.பி. 1911ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீரணோத்தாரண மஹா ஸம்ப்ரோக்ஷணத்தின்போது ஏன் இந்த சிவன் ஸந்நிதி அகற்றப்படவில்லை. அந்த ஸந்நிதியைப் புதுப்பிக்கும் பணியில் அப்போதைய ஜீயர் ஸ்வாமி ஈடுபடுவானேன்? அவர் ஆகமம் அறியாதவரா? அல்லது சாஸ்த்ரம் தெரியாதவரா? இல்லை 600 ஆண்டுகளுக்குமுன் சிவன் ஸந்நிதி இருந்ததாகக் குறிப்பிடும் ஹரிதாஸர் பொய்பேசுபவரா? அல்லது அவர் காலத்தில் திருக்குறுங்குடியில் இருந்த அனைவருக்கும் ஆகமம் தெரியவில்லையா? தமது பேட்டியின் மூலம் ஸ்ரீவான மாமலை ஜீயர் ஸ்வாமி என்ன சொல்ல முற்பட்டார் என்பதே பலருக்குப் புரியவில்லை!

தற்போது திருக்குறுங்குடியில் பாமரமக்கள் மனத்தில் குழப்பம் விளைவித்துத் தேவையற்ற ஆகம, ப்ரச்ன குறிப்பு களை மேற்கோள் காட்டி சிவன் ஸந்நிதி அகற்றப்பட்டதை நியாயப்படுத்தி புதிதாகக் கோயில்கட்டி பார்வதியுடன் சிவனை ப்ரதிஷ்டை செய்வதால் பல விபரீத விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும். மேலும் அனைத்துக் கோயில் அமைப்பு களும், கைங்கர்யங்களும் அந்தந்த ஆகமங்களின்படி நடப்ப தாகக் கூறமுடியாது. சிஷ்டாசாரமும் ஆகமமும் இணைந்தே செயல்படுகிறது. **அமைதியாகவிருக்கும் தேன் கூட்டைக் கலைக்கும் முயற்சியே திருக்குறுங்குடியில் சிவன் ஸந்நிதி இடிக்கப்பட்ட செயல். இச்செயலை ஆதரிப்போர் விருப்பு வெறுப்பின்றி சிந்தித்தால் உண்மை தன்னடைவே புலப்படும்.**

ஸ்ரீவைகானஸ, ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமங்களுக்கு உட் பட்ட கோயில்களில் அந்தந்த ஆகமங்களில் சொல்லப்படாத, ஒப்புக் கொள்ளப்படாத பல நடைமுறைகளுக்கு சிஷ்டா சாரமே ப்ரமாணமாகும். இது ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அடிப்படைக்கொள்கை. ஆகமத்தில் கூறப்படாத பல நடைமுறைகள் சிஷ்டாசார க்ரமத்தில் நடைபெற்று வரு வதற்கு சில உதாரணங்கள் :

***ஒரு சிறுமின்பொறி ஒரு தொழிற்சாலையையே நாசம் செய்திடும் செயலுக்கு ஒப்பானது இது என்று பாஞ்சஜன்யம் இதழ்களில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.***

***கீதாசார்யன் மாத இதழில் (?) திவ்யதேச பாரம்பரியப் பாது காப்புப் பேரவையினர் திருக்குறுங்குடியில் தேவையற்ற குழப்பத்தை விளைவிப்பதாகக் கட்டுரை ஒன்று வானமாமலை ஜீயர் ஸ்வாமியின் ஸ்ரீகார்யம் எழுதிய கடிதம் ஒன்று வெளி யிடப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீகார்யம் ஸ்வாமி கீழ்க்கண்ட வாறு குறிப்பிட்டிருந்தார்.***

***‘‘திருக்குறுங்குடியில் குழப்பம் விளைத்தது (விளை வித்தது) யார் என்ற கேள்விக்கு தெளிவான பதில் இவரையும்***

**(பாஞ்சஜன்யம் ஆசிரியர்) இவரது நண்பர் திரு.மாதவனையுமே விரல் கொண்டு சுட்டிக்காட்டி – ''நீவிர் இருவருமே'' என்று தான் கூறவேணும். திருக்குறுங்குடி, விஷயத்தில் வீண் பிடிவாத மனப்பான்மையை விடுத்து, மேலும் மேலும் இடையூறுகள் விளைக்காமல் ஒற்றுமைகாத்திடவும், சிறப்பான முறையில் க்ஷேமங்கரமாக அமையப் போகும், மஹேந்திர கிரிநாதனது ஸந்நிதி மாற்றத்தை மனமார ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்பை அனைவரும் நல்கிட வேணும் என்று ஸ்ரீஸ்வாமியின் நியமனப்படி இவ்வடிய வன் அன்புடன் வேண்டுகின்றனன்''.**

*திருக்குறுங்குடி ஸ்ரீபேரருளாள ராமாநுஜஜீயர் ஸ்வாமி தற்சமயம் தன்னிச்சையாக எந்த முடிவுகளையும் எடுப்ப தில்லை. அனைத்து முடிவுகளையும் ஸ்ரீநிவாஸா சாரிடபிள் ட்ரஸ்ட் ஸ்ரீவேணு ஸ்ரீநிவாஸன்தான் எடுத்து வருகிறார் என்பதற்கு 24.4.2005 அன்று நடந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக் காட்டாகும்.*

*''தம்முடைய அபரிமிதமான செல்வாக்கினாலும், பண பலத்தாலும், பலரைப் பணியவைக்கும் திரு.வேணு ஸ்ரீநிவாஸன் பக்கம் நின்றாரை, நான்காவது ப்ராகாரத்தில் (?) அமைத்திடும் தம்முடைய குறிக்கோளை எவ்வழியைப் பின்பற்றியேனும் அனுமதிபெற்று, பெயர்த்தெடுக்கப்பட்ட சிவனைப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தனிக்கோயிலில் ப்ரதிஷ்டை செய்யக்கூடுமானால் வெள்ளி ரிஷபவாகனத்தில் மகேந்திரகிரிநாதர் பார்வதியோடு திருவீதி உலா கண்டருளும் நாள் வெகு தூரத்தில் இல்லை'' என்று பாஞ்சஜன்யத்தில் குறிப் பிடப்பட்டிருந்தது.*

*திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவையின் சார்பில் சிவன் ஸந்நிதி அகற்றப்பட்டது தொடர்பாக, பாஞ்சஜன்யம் இதழ் 70 மார்ச் 2005 - பக்கம் 14இல், குறிப்பிட்டுள்ளபடி சட்ட எண்.*45 Places of worship special provisions act 1991 *இன் குற்றவியல்*

பிரிவுகளின் கீழ் சம்பந்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 5.4.2005 அன்று புகார் மனு கொடுக்கப் பட்டது. அந்த மனுவைக் காவல் நிலையத்தினர் பதிவு செய்ய வில்லை. அவ்வாறு திருக்குறுங்குடி காவல் நிலையத்தினர் புகார் மனுவைப் பதிவு செய்யாததைக் குறித்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் 21.04.2005 அன்று ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. காவல் நிலையத்தினரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டித்த மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு.K.P.சிவசுப்ரமணியம் அவர்கள் 25.04.2005 தேதிக்குள் பதிலளிக்கும்படி அரசிற்கு ஆணையிட்டார். சில தவிர்க்க முடியாத காரணங் களால் 25.04.2005 அன்று மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த மனுமீதான விசாரணை உயர்நீதிமன்றத்தின் கோடைகால விடுமுறைக்குப் பிறகு நடைபெற்றது.

**அப்படியானால் 1911,1982ஆம் ஆண்டுகளில் சிவன் ஸந்நிதிக்கு ஏன் அவர்கள் ஸம்ப்ரோக்ஷணம் செய்தார்கள். அப்படியானால் நம் முன்னோர்கள் ஆகம அறிவு அற்றவர் களா? கலியன் வானமாமலைஜீயர் ஒருவர்தான் ஆகமம் கற்றவரா? ஆகமத்தின் பேரில் ஏன் இந்த திடீர் அக்கறை? இந்தக் கேள்விகளுக்கு ஸ்வாமியின் அபிமானிகள் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று பாஞ்சஜன்யத்தில் தலை யங்கம் எழுதப்பட்டது.**

Between the King and the Kingdom the Kingdom is superior to the King என்ற மரபுச் சொற்றொடரின்படி மடாதிபதி உயர்ந்தவரா? மடம் உயர்ந்ததா என்றால்? மடாதிபதியைவிட உயர்ந்தது மடம். ஆகவே மடாதிபதிகள் மீது வழக்குத் தொடுப்பதில் எந்தத் தவறும் இல்லை. விருப்பு வெறுப்பின்றி உணர்ச்சிகளுக்கும், விசுவாசத் தன்மைக்கும் இடம் அளிக்காமல் ஆராய்ந்து பார்த்தால் நியாயம் எந்தப் பக்கத்தில் உள்ளது என்பது தன்டைவே தெரியும்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் (W.P.13382/05) ரிட் மனு ஒன்று திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவையின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 5.4.2005இல் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டப் புகார் மனுவினை அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளாததால் சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசாங்கத் தரப்பில் ப்ரதிவாதிகளாக 1. உள்துறை செயலர், 2.திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், 3. திருக்குறுங்குடி காவல் நிலைய அதிகாரி, 4.ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அரசாங்க அதிகாரிகள் அல்லாத பிரதிவாதிகளாக – 5. ஸ்ரீநிவாஸா அறக்கட்டளைத் தலைவர் 6. ஸ்ரீமத் பேரருளாள ராமாநுஜஜீயர்–திருக்குறுங்குடி, 7. ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி–காஞ்சி, 8. ஸ்ரீமத் கலியன் வானமாமலை ராமாநுஜ ஜீயர்–நாங்குனேரி, 9.ஸ்ரீவேணு ஸ்ரீநிவாஸன்,10. திரு.உன்னி க்ருஷ்ண பணிக்கர்–பரப்பனங்காடு ஆகியோரும் சேர்க்கப் பட்டிருந்தனர். இந்த வழக்கு உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு.P.D.தினகரன் அவர்களால் 15.06.2005 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சுமார் 45 நிமிடம் நடந்த இந்த விசாரணையின் போது நமது தரப்பில் 5 நிமிடங்களே செலவழிக்கப்பட்டது. மீதி உள்ள 40 நிமிடத்தில் மாண்புமிகு நீதிபதி அவர்கள் அரசாங்கத் தரப்பு வக்கீலிடம் கேள்விகள் பலவற்றைக் கேட்டார்.

உரிய அதிகாரிகளிடம் முன் அனுமதி பெறாமல் இரவோடு இரவாக சிவன் ஸந்நிதி அகற்றப்பட்டது குறித்து அரசாங்க வக்கீல் சரியான பதில் ஏதும் தராததால் அவரைக் கடிந்துகொண்ட நீதிபதி அவர்கள், இவ்வாறு இன்னொரு நபர் ஒரு கோயிலை இடித்தபிறகு அரசாங்கத் தரப்பில் அவர்மீது குற்றம் சாட்டியபிறகு அவர் செய்தது சரியான செயல்தான் என ஒப்புக் கொள்வீர்களா? என்று கேட்டார்.

இவ்வளவு மாதங்கள் ஆகியும் உள்துறை செயலர் தகுந்த நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்லாமல் அந்தச் செயலை அரசு ஆணை ஒன்றின் மூலம் ஒப்புதல் அளித்திருப்பதை மாண்புமிகு நீதிபதி அவர்கள் சுட்டிக்காட்டி இதுபோன்ற நிகழ்ச்சிகள் மக்களுக்கு அரசாங்கத்திடம் உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்திடும் என்றும் கூறினார். மாண்புமிகு நீதிபதி அவர்கள் 5 முதல் 10 இலக்கமிட்ட பிரதிவாதிகள் மேல் குற்றவியல் சட்டப் பிரிவு களின்படி உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு தீர்ப்பளித்துள்ளார். 23.06.2005 அன்று இந்தத் தீர்ப்பை எதிர்த்து உர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் நீதிபதி களுக்குமுன்பு, பிரதிவாதிகள் 5 to10 சார்பில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

மாண்புமிகு நீதிபதி P.D.தினகரன் அளித்த தீர்ப்பினை எதிர்த்து வேணுஸ்ரீநிவாஸன், உன்னி க்ருஷ்ண பணிக்கர், வானமாமலை ஜீயர், பேரருளாள ஜீயர், காஞ்சி சங்கராசார்யர் ஆகியோர் இரண்டு நீதிபதிகள் கொண்ட டிவிஷன் பெஞ்சிற்கு மேல்முறையீடு செய்தனர். இந்த மேல் முறையீட்டை விசாரித்த தலைமை நீதிபதியைக் கொண்ட முதலாம் டிவிஷன் பெஞ்ச் மாண்புமிகு P.D. தினகரன் அளித்த தீர்ப்பிற்குத் தற்காலிகத் தடை விதித்தது. அதன் பிறகு அனைத்துத் தரப்பினர்களின் வழக்குகள், திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு மற்றும் அரசாணையை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு ஆகிய மூன்று வழக்குகளும் மாண்புமிகு நீதிபதி ப்ரபா ஸ்ரீதேவன், மாண்புமிகு நீதிபதி R.பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு 3.10.2005 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

**இந்தத்தீர்ப்பின்படி,**

1. மாண்புமிகு நீதிபதி திரு.P.D. தினகரன் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கோரும் ஆணை மீது தற்காலிகத் தடை பிறப்பிக்கப்பட்டது. சிவில் வழக்கின் முடிவில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

2. நாங்குனேரி கூடுதல் மாவட்ட முன்சீஃப் நிதிமன்றத்தில்

தொடரப்பட்ட வழக்கு 31.12.2005க்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

3. இந்த வழக்கில் மற்றைய மனுதாரர்களும் தங்களை வாதிகளாகவோ, பிரதிவாதிகளாகவோ இணைத்துக் கொள்வதற் கான மனுவை நாங்குனேரி மாவட்டக் கூடுதல் நீதிபதி நீதிமன்றத் தில் தாக்கல் செய்யலாம். அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டப்பின் இந்த வழக்கில் அவர்களும் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

4. திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு 31.12.2005 வரை அவர்களுடைய கோப்புகளில் இருக்க வேண்டும். 31.12.2005ற்குப் பிறகு அந்த புகார் மனுவின் மீது தேவையான நடவடிக்கையைக் காவல் துறையினர் எடுக்க வேண்டும்.

5. அரசாணை எண்.55இன் செயல்பாடுகள் 31.12.2005 வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. 31.12.2005ற்குப் பிறகு அந்த மனு மீதான விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடை பெறும்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசார ணையின்போது வானமாமலை ஜீயர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் அவருடைய கட்சிக்காரருக்கும், திருக்குறுங்குடி கோயில் இடிப்பிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று வாதாடினார்.

மத்திய அரசு சட்டம் 42இன் படி குற்றம் புரிந்தவர்கள் **(பேரருளாள ஜீயர், வேணுஸ்ரீநிவாஸன்)** குற்றத்தைச் செய்யும்படி தூண்டியவர் **(உன்னிக்ருஷ்ண பணிக்கர், காஞ்சி சங்கராசார்யர்)**, இவ்வாறு இழைக்கப்பட்ட தீங்கிற்குத் துணை போனவர் **(வான மாமலை ஜீயர்)** ஆகிய மூன்று தரப்பினருக்கும் ஒரே வகை யான தண்டனை குறிப்பிடப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் திருக் குறுங்குடி கோயிலினுள் இருந்த சிவன் ஸந்நிதி அகற்றப்பட்டது மத்திய சட்டம் 42ற்கு உட்பட்டது என்று நீதி வழங்கப்பட்டால் அந்தத் தீர்ப்பு மனிதர்கள் எத்தகைய உயர்பதவி வகித்தாலும், பணம் படைத்தவர்களாய் இருந்தாலும், காஷாயம் தரித்தவர்களானாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே-என்ற நீதியை நிலை

நாட்டிடும். ***(29-11-2010 அன்று வழங்கப் பட்ட தீர்ப்பில் நீதிபதி மாலா அவர்கள் வழங்கிய தீர்ப்பில் இந்த இடிப்பு வழக்கில் தொடர்புடையோர் இந்த சட்டத்தின்கீழ் குற்றம் புரிந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். இதுவே தர்மத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். 'வாய்மையே வெல்லும்', 'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்', 'சிவன் சொத்து குலநாசம்' போன்ற மரபுத் தொடர்களும், பழமொழிகளும் பொருளற்ற சொற்றொடர்கள் அல்ல.)***

***14.3.2006 அன்று நாங்குனேரி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிபதி திரு. ராஜவேலு அவர்கள் மிகத் தெளிவான தீர்ப்பினை வழங்கினார். அவற்றிலிருந்து சில முக்கியப் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன:***

*''சிவன் ஸந்நிதி மீண்டும் அகற்றப்பட்ட இடத்திலே மூன்று மாத கால அவகாசத்திற்குள் பிரதிவாதிகள் 1,2,3 மற்றும் 4 ஆகியோர்களால் கட்டித்தரப்பட வேண்டும் என்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியது.*

*திருக்குறுங்குடி சிவன் ஸந்நிதி அகற்றப்பட்ட விஷயத்தில், ஆன்மீகத்தில் வழிகாட்டியாய் இருக்க வேண்டிய ஜீயர்க ள், தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நல் ஆலோசனைகளை வழங்கும் கடமைகளிலிருந்து விலகி, தவறானதொரு செயலுக்குத் துணைபோந்துள்ளார்கள். அவ்வாறு துணை போன தோடு மட்டுமல்லாமல்,* ***அவ்வப்போது அடியேன் மீதும், திருக்கோட்டியூர் மாதவன் மீதும் அவதூறு சேற்றினை அள்ளி வீசியுள்ளனர்.***

*சிவன் ஸந்நிதி அகற்றப்பட்ட விஷயத்தில் இவர்கள் வேண்டுமென்றே ஒருதலைபட்சமாக செயல்பட்டுத் தாங்கள் வகித்துவரும் ஸ்தானத்திற்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் தேவையற்ற பொய்ப் பிரசாரங் களையும், தரக்குறைவான வார்த்தைகளையும் அவ்வப்போது பரப்பி வந்தனர். நாங்குனேரி நீதிமன்றம் இவர்கள் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத் தீர்ப்பில் பல உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பிரதிவாதியின் தரப்புச் சாட்சி*

*யங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.*

நாங்குனேரி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து வள்ளியூர் சப்-கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு ஜீயர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. திவ்யதேச பாரம்பர்யப் பாதுகாப்புப் பேரவையின் வாதங்களையும், மற்றைய மனுதாரர்களுடைய வாதங்களையும் கேட்காமலேயே நாங்குனேரி நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதை எதிர்த்து 2ஆவது மேல்முறையீடு மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு வள்ளியூர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்குத் தடையுத்திரவு பெறப்பட்டது. அதன்பிறகு இந்த வழக்கு மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் பல நாட்கள் விசாரிக்கப்பட்டு 29-11-2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பினை அழகிய நம்பிராயரே நீதிமதி மாலா மேல் ஆவேசித்து எழுதியதாகக் கொள்ள வேண்டும். அந்தத் தீர்ப்பில் பல்வேறு உயர்நீதி, உச்சநீதி மன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி நீதியை நிலைநாட்டியுள்ளார் மாண்புமிகு நீதிபதி மாலா அவர்கள். அந்தத் தீர்ப்பு ஆங்கிலத்தில் 107 பக்கங்கள் கொண்ட தாக அமைந்துள்ளதால் குறிப்பிட்ட சில கருத்துக்களை மட்டும் முன் வைக்க முற்படுகிறேன்.

**74. At this juncture, this Court has to consider the oral and documentary evidence. Regarding the existence of the Temple, D.W.4 in his cross-examination stated that the Shiva Temple has been constructed 200 years ago, but the original Temple was constructed 1300 years ago. In his cross-examination, D.W.4 fairly conceded that the Lord Shiva—Mahendragirinathar came into existence 200 years ago, and he also mentioned about the Lord Pakkam Nindrar, i.e. the present Lord Shiva in the original position. In his cross-examination he has fairly conceded that in 1911, there was a “Kumbhabhishekam” (consecration ceremony**

of the Temple) and at that time, it was also mentioned as "Lord Pakkam Nindrar". So, learned counsel for the plaintiffs submitted that the existence of Lord Siva Temple in the place where it was originally situated as per the version of D.W.4, is much prior, nearly 200 years ago. After that, several "Kumbhabhishekams" have been performed and the Temple Trustees have not taken steps to remove the Idol of Lord Shiva.

75. In this connection, it is appropriate to consider the documents filed by the defendants. In Ex.B-3 which is the "Thirukurungudi Divya Sthala Malar", in page 47, it is stated that the Lord Shiva is in the Vaishnavaite Temple while praising the Lord Vishnu. It is stated therein as follows:

அக்கும்புலியனதளு முடையாரவரொருவர்
பக்கம் நிற்கநின்ற பாண்பளூர்போலும்
தக்கமரத்தின் தாழ்சினை யேறி தாய் வாயில்
கொக்கின்  பிள்ளை வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே

கொக்கின் குட்டியானது தனக்கு ஏறத் தகுந்ததான ஒரு மரத்தினுடைய தாழ்ந்த கிளையில் ஏறி தாய்க்கொக்கின் வாயிலிருக்கிற வெள்ளிறா என்னும் சாதி மீனை உண்ணப் பெற்ற திருக்குறுங்குடியென்னும் தலமானது எலும்பையும் புலியுன் தோலையும் உடையவரான சிவபிரானாகிற ஒருவர் அருகே யிருக்க இடங்கொடுத்து எழுந்தருளியிருக்கின்ற சீலகுண முடையரான பெருமாளுடைய திவ்யதேசமாம்.

Ex.B-3 came into existence in 1967 much prior to the litigation. Furthermore, it was marked through D.W.1.

76. Learned Senior Counsel for D7 to D9 submitted that in the book titled "Thiruvaimozhi", it was

mentioned that always, the Lord Vishnu has given His right side of the body to the Lord Shiva. Likewise, as per the Divine Hymn of the Saint Thirumangai Azhwar,

which means that the Lord Shiva is taking part and is besides the Lord Vishnu in the village called Thirukurungudi. But the above reliance on the book "Thiruvaimozhi" does not merit acceptance, because, as per the version in the Divine Hymn of the Saint Thirumangai Azhwar, as quoted above, the Lord Shiva was in existence in the village Thirukurungudi as "Lord Pakkam Nindrar" to the Lord Vishnu.

84. Therefore, even in 1879, it was mentioned in Ex.B-4 Gazetteer about the history of Thirukurungudi Temple and in such circumstances, I am of the view that Ex.B-4 Gazetteer has to be taken as supporting evidence to decide as to whether the Lord Pakkam Nindrar, i.e. Idol of Lord Siva, was situated in the Vaishnavaite Temple, namely Arulmighu Azhagiya Nambirayar Temple, and so, the Lord Pakkam Nindrar was in existence from ancient times.

85. In Ex.B-5 is the "Kumbhabhishekam Invitation" (consecration invitation), namely, = v¸USÖ[Si= ìÁõª |®¤ºÝøh¯ Â©õ|õv ã º÷nõuõµn ¤µvèhõ £zv›øP which is of the year 1911, in which it is stated that the Kumbhabhishekam is also being performed for the Lord "Pakkam Nindrar". It is stated therein as follows:

ஃ.....நிறைந்த சோதிவெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன் மேனி யோடும் எழுந்தருளியிருக்கிற நம்பியினுடைய தென்னன் குறுங் குடியுள் செம்பவளக்குன்றினை என்னும் ப்ரவாளாக்ய

**விமாநத்தின் ஜீர்ணோதாரணமும், வீற்றிருந்த நம்பி விமானம் பள்ளி கொண்ட நம்பி விமானம், குறுங்குடிவல்லித்தாயார் குறுங்கைநாயகி விமானம். அக்கும்புலியினதளுமுடை யாறவ ரொருவர் பக்கம் நிற்கின்ற பக்க நின்றாரான மஹேந்திரகிரிநாதர் விமானம்.........**

**86. In Ex.B-6 book called ''கைசிக புராணம் பட்டர் வ்யாக்யானத்துடன், a topic is mentioned about@ நம்பியும் நம்பாடுவானும் in which, there is a reference as @அக்கும் புலியன;**

